பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 25 செவ்வாய்க்கிழமை 10.11.2020 கதிர் 05

### இது ரகசியம் அல்ல!

இருபதாவது அரசமைப்புதிருத் தம் நிறைவேற்றப்பட்டவுடன், இதோ பஸில் ராஜபக்ஷ தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்கு வரப் போகின்றார் என எதிர் பார்க்கப்பட்டது. அவர் புதிய நிதி அமைச்சராகின்றார் என்றும் செய்திகள் பக்கம் 02

# விடாது துரத்துகிறது கொரோனா 14, 000ஐ கடந்த நோயாளர்கள்

## நேற்றும் 356 பேர் தொற்றுடன் அடையாளம்



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்தைக் கடந்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய நேற்றும் 356 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலையில் மட்டும் சிக்கிப் பாதிப்படைந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 811 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 285 ஆக அதிகரித்துள்ளது.

நோயாளர்களில் 5 ஆயிரத்து 369 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 8 ஆயிரத்து 880 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அத்துடன் 36 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## நாட்டை ஒருபோதும் மூடி வைக்க முடியாது

# கொரோனாவுக்கு முற்றுப்புள்ளிவைக்க பொதுமக்களின் ஒத்துழைப்பே தேவை!

## ஊடகங்களுக்கும் பொறுப்பு உண்டு என்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய



எமது நாட்டின் சுகாதாரத் துறையால் மிக இலகுவாக கொவிட் நோய்த்தொற்றை ஒழிக்க முடியும் என்றும், இதற்கு மக்களின் ஒத்துழைப்பே தேவை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். பக்கம் 02

## சிறைக் கொத்தணிகள்: 110 பேருக்குக் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் 3ஆவது அலையின் தாக்கம் அதிரித்து வரும் நிலையில் சிறைச்சாலைகள் புதிய கொத்தணிகளாக மாறி வருவது பக்கம் 02

## மேலும் 2 கிராமங்கள் தனிமைப்படுத்தலில்

அங்குலான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு கிராம சேவகர் பிரிவுகள் நேற்றிலிருந்து தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. பக்கம் 02

## கம்பஹா மாவட்டத்தில் மேலும் 2 பொலிஸ் பிரிவுகள் முடக்கம்!

கம்பஹா மாவட்டத்தின் கந்தானை மற்றும் மஹாபாகே பொலிஸ்பிரிவுகள் நேற்று மாலையிலிருந்து தனிமைப்படுத்தல் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. பக்கம் 02

## கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்ய அனுமதி

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு மரணமடையும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனுமதி வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நீதி அமைச்சர் அலி சப்ரி ஜனாதிபதியிடம் இது தொடர்பாக எடுத்துரைத்துள்ளார். இதன்போதே ஜனாதிபதி மேற்படி அனுமதியை வழங்கியுள்ளார்.

அதற்கமைய கொரோனாத் பக்கம் 02

## கொரோனா வைரஸால் நேற்றும் ஒருவர் மரணம்

### பலியெடுப்பு 36ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாககொழும்புதேசியதொற்றுநோயியல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த கந்தானைப் பகுதியைச் பக்கம் 02

## தாய்ப்பால் புரைக்கேறி சிசு உயிரிழப்பு

தாய்ப்பால் புரைக்கேறி ஒரு மாதமேயான ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

வடமராட்சி கரவெட்டி மேற்கு, பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. பக்கம் 02

## நாளை நாடாளுமன்றம் 10 மணி நேரம் கூடும்

2020 ஒதுக்கீட்டுச்சட்டமூலம் முன்வைக்கப்படும் தினமான நாளை புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வை முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணிவரை நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்றுத் தீர்மானித்தது. பக்கம் 02

# தமிழர்களுக்கென 'மக்களுக்கான நீதி' சட்டத்தரணிகள் கூட்டு நேற்று உதயம்

## இன அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்த நடவடிக்கைகளுக்கு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 10

தமிழர் தாயகத்தில் சிங்கள ஆட்சி மற்றும் அதிகாரத் தரப்புகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டாய நில அபகரிப்பு, அரச நியமனங்களில் பாரபட்சம், இனப்பாகுபாடு, அடக்குமுறை மற்றும் அநீதிகளால் பாதிக்கப்படும் தமிழ்மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கென தம் சட்டப்புலமையைப் பயன்படுத்த விரும்பும் சட்டத்தரணிகள் கூட்டு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் ஏற்பாட்டில் உதயமானது. பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெளியாகின. நானும் எழுதியிருந்தேன்.

ஆனால் இவ்விடயத்தில் வெளியில் ஏதும் நகர்வதாகத் தெரியவில்லை. விவகாரம் கிணற்றில் போட்ட கல்லாக இருக்கின்றது. ஏன் என்று துளாவினேன்.

நான் இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டிய சட்டச் சிக்கல்தான் காரணம். அதனால்தான் விடயம் தாமதமாகின்றது. ஆனால் சட்டச் சிக்கலை வெற்றிகரமாகத் தாண்டி, விரைவில் பஸில் நாடாளுமன்றுக்கு வருவார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்று அடித்துக் கூறின.

2020 பொதுத் தேர்தல் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்ட போது 19ஆவது திருத்தமே நடைமுறையில் இருந்தது. இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் அந்த ஷரத்தின் பிரகாரம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது. அதனால் அத்தேர்தலில் மொட்டுக்கட்சியின் ஸ்தாபகராக அக்கட்சியை இயக்கி, பெரு வெற்றியைத் தேடித் தந்த பஸில் ராஜபக்ஷவினால், அதில் ஒருவேட்பாளராகப் போட்டியிட முடியவில்லை. குறைந்த பட்சம் தேசியப்பட்டியல் வேட்பாளர் அணியில் கூட அவர் பெயரைச் சேர்க்க முடியவில்லை.

இப்போது புதிய அரசில், 19ஆவது திருத்தத்தை மாற்றீடு செய்வது போல இருபதாவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு, அது நடைமுறைக்கும் வந்துவிட்டது.

அதன்படி, இரட்டைப் பிரஜாவுரிமையின் கீழ் இன்னொரு நாட்டின் குடியுரிமையை வைத்திருப்பவரும் நாடாளுமன்ற உறுப்பினராகலாம். அதன்படி, அமெரிக்கக் குடியுரிமையை வைதிருக்கும் பஸில் ராஜபக்ஷவும் நாடாளுமன்ற உறுப்பினராக முடியும். அதற்குத் தடையில்லை.

ஆனால் எப்படி எம்.பியாவது என்பதுதான் கேள்வி. மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம்தான் அவர் எம்.பியாக வேண்டும். அதற்குத் தேர்தல் சமயத்தில் தாக்கல் செய்யப்பட்ட மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் அணியில் பஸிலின் பெயரில்லை. என்ன செய்வது என்பதுதான் கேள்வி.

இப்போது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் மொட்டுக் கட்சி எம்.பி. ஒருவர் பஸிலுக்கு இடமளிப்பதற்காக பதவியை இராஜினாமாச் செய்யத் தயார். பஸில் வரும் போது இடமளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்தான் அவருக்கு எம்.பி. பதவியே ஆரம்பத்தில் வழங்கப்பட்டதாம்.

அவர் இராஜினாமாச் செய்து தேசியப் பட்டியல் வெற்றிடம் ஒன்று வந்தாலும், வேட்பாளர் பட்டியலில் பெயர் இல்லாத பஸிலைக் கண்மூடித்தனமாக அந்த எம்.பி. பதவிக்கு நியமித்தால் சட்டச் சிக்கல் வரும்.

அதனையும் வெட்டி ஓட ஓர் ஏற்பாட்டை பஸிலே செய்து விட்டார் எனத் தெரிகின்றது.

மொட்டுக் கட்சியின் தேசிப் பட்டியல் வேட்பாளர்களில், இதுவரை எம்.பி. பதவிகள் ஏற்காமல் இருக்கும் அனைவரிடமும் தாங்கள் அந்த வேட்பாளர் பட்டியலில் இருந்து விலகுகின்றார்கள், அந்தப் பட்டியலில் எம்.பியாகத் தங்களுக்கு விருப்பமில்லை என்று ஒரு கடிதம் பெறப்படுகின்றது. ஒரே கடிதத்தில் அவர்கள் அனைவரிடமும் கையயழுத்துகள் பெறப்பட்டனவா அல்லது தனித்தனிக் கடிதங்களில் ஒப்பங்கள் பெறப்பட்டனவா என்பது தெரியவில்லை.

அந்தக் கடிதத்தைத் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைத்தால், அதன்படி மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் பட்டியல் அதற்குப்பின் வெறுமையாக இருக்கும். ஆகவே இப்போது இராஜினாமாச் செய்யும் தேசியப் பட்டியல் எம்.பியின் இடத்துக்குப் புதியவர்களை நியமியுங்கள் என்று தேர்தல் ஆணையம் மொட்டுக் கட்சிச் செயலாளரைக் கோரும். அப்போது அவர் பஸிலின் பெயரைக் கொடுக்க, அவர் எம்.பியாவார்.

இதுதான் பஸில் தரப்பின் திட்டம் என்பதும் உறுதியாகத் தெரிகின்றது.

அந்த நடவடிக்கையைக் கூட அடுத்த இரண்டு, மூன்று தினங்களுக்கு மொட்டுத் தரப்புத் தள்ளிப் போட்டிருப்பதாகத் தெரிகின்றது.

தற்போதைய தேர்தல் ஆணையம் அதிக சுயாதீனத்துடன் – சுதந்திரமாக – செயற்பட்டது. இரட்ணஜீவன் கூல் போன்ற அந்தத் தேர்தல் ஆணையத்தின் ஆணையர்கள் தமது இசகு பிசகு வேலைகளுக்குத் துணை போக மாட்டார்களா என்று மொட்டுத் தரப்பு கருதுகின்றது.

அந்த ஆணையத்தின் பதவிக் காலம் நாளை மறுதினத்துடன் முடிகின்றது. அடுத்த நாள் புதிய தேர்தல் ஆணையம். அதுவும் இருபதாம் திருத்தத்தின் கீழ் தாம் விரும்பியவர்களை ஆணையாளர்களாக ஜனாதிபதியே நியமிக்க முடியும். அந்த சிறப்புரிமையை இப்போது நிறைவேற்றப்பட்ட இருபதாவது திருத்தம் அவருக்குத் தந்து நிற்கின்றது.

அந்த ஆணையத்தை ஜனாதிபதி கோட்டாபய தம்மிஷ்டப்படி நியமித்தும், பஸில் ராஜபக்ஷ தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்படுவதை எந்தத் தங்கு, தடங்கல்கள், இடையூறின்றி உறுதிப்படுத்த வேண்டும் என்ற முன் நிபந்தனை, இனி வரப்போகின்ற ஆணையாளர்களுக்கு முற்கூட்டியே விதிக்கப்பட்டிருக்குமோ என்னவோ!

அவர்கள் வந்ததும் பஸிலும் நாடாளுமன்றுக்கு வருவார் – புதிய நிதி அமைச்சர் என்ற மிடுக்கோடு. அத்தோடு ராஜபக்ஷ குடும்பத்தின் முடியாட்சி இன்னும் வலுப்பெறும்.

– மின்னல் –

## தமிழர்களுக்கென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வட மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலுமிருந்தும் 27 சட்டத்தரணிகள் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தலைமையில் கூடி 'மக்களுக்கான நீதி' என்ற இந்தத் திறந்த அமைப்பை நேற்று உருவாக்கினர்.

மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கும் இயங்குநிலை சட்டத்தரணிகள் கூட்டாக ஒருமித்துச் செயற்பட்டு, அனைத்து சட்டத்தரணிகளும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள விடயங்கள் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்து, சட்ட ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நேற்றுத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

திறந்த அமைப்பான இந்தக் கூட்டில் ஆர்வம் கொண்ட எந்தச் சட்டத்தரணியும் அரசியல், கட்சி வேறுபாடுகளைத் துறந்து இணைந்து பணியாற்ற முடியும் எனவும் கூட்டத்தில் கூறப்பட்டது.

இந்தச் சட்டத்தரணிகள் கூட்டில் சட்டத்தரணிகளான சயந்தன், ரஜீவன், மணிவண்ணன், திருக்குமரன், அருச்சுனா உட்பட்ட வடக்கின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த 27 சட்டத்தரணிகள் இவ்வாறு முதல்கட்டமாக நேற்று ஒன்று கூடி, சட்ட விடயங்களை ஒன்றிணைந்து முன்னெடுக்கத் தீர்மானித்தனர். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள், திணைக்களங்களினால் பிடிகப்பட்டுள்ள நிலங்கள், தொல்லியல் எனும் பெயரில் மாற்றப்படும் நிலங்கள் எனத் தமிழர்களின் தாயக நிலங்களைப் பறிக்கும் நடவடிக்கைகள், அரச வேலை வாய்ப்பு நியமனங்கள் வழங்கப்பட்டு பின் அது நிறுத்தப்பட்டவர்களின் விடயங்கள், அரசியல் ரீதியில் பழி வாங்கப்பட்டவர்களின் பாதிப்புகள் போன்றவற்றை இந்த அமைப்பு முதல் கட்டமாகக் கையாளவிருக்கின்றது.

## நாளை நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதற்கமைய முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மற்றும் மூன்றாவது வாசிப்பு ஆகியன இடம்பெறும்.

அதனையடுத்து பிற்பகல் 5 மணி முதல் 8 மணிவரை நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்படும் யோசனை சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அன்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூல விடைக்கான கேள்வியை எழுப்புவதற்கு நேரம் ஒதுக்கப்படாது என்பதுடன், மதியபோசன இடைவேளைக்காகவும் விவாதம் இடைநிறுத்தப்படாது.

அத்துடன் 2021ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி நிதியமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்படும்.

## கொரோனாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொவிட் நோய்த்தொற்று ஒரு சுகாதாரப் பிரச்சனையாகும். அதிலிருந்து மக்களைப் பாதுகாத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது சுகாதார சேவையினதும் அரசினதும் பொறுப்பாகும். உலகின் உயர்தரம் வாய்ந்த அறிவைக் கொண்டுள்ள எமது நாட்டின் வைத்தியர்களுக்கும் சுகாதாரத்துறையினருக்கும் அதனைச் செய்ய முடியும் என்று தான் உறுதியாக நம்புகின்றார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கொவிட் ஒழிப்பு விசேட செயலணி நேற்று முற்பகல் கூடியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நோய்த் தொற்றுக்கு மத்தியில் எமக்கு மேற்கொள்ள முடியுமான மாற்று வழிகள் மூன்று உள்ளன. ஒன்று ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து முழு நாட்டையும் முடக்குவது. இரண்டாவது எதனையும் செய்யாதிருப்பது. மூன்றாவது நோயைக் கட்டுப்படுத்தும் அதே நேரம் நாட்டை வழமை போன்று பேணிச் செல்வதாகும். நாம் மூன்றாவது மாற்றுவழியைத் தெரிவு செய்திருக்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

கொவிட் நோயாளிகளை இனங்கண்டு உரிய சிகிச்சையை வழங்கி, முதற் கட்டத்திலேயே குணப்படுத்த மருத்துவர்களுக்கும் பணிக்குழாமினருக்கும் முடியுமாக உள்ளது. எனவே, தீவிர சிகிச்சை சேவைகள் தேவையில்லை. நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் தொற்றுக்குள்ளாவதைத் தவிர்ந்திருப்பதற்கும் மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்காகப் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டல்களை மருத்துவர்களின் ஊடாக மக்களிடம் கொண்டு செல்வது ஊடகத்துறையின் முக்கிய பொறுப்பும் கடமையுமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆரம்பத்தில் கொவிட் நோய்த்தொற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியதன் பின்னர் ஊடகங்களும் மக்களும் அனைத்தையும் மறந்துவிட்டதும் பொறுப்பைத் தவறவிட்டதும் தற்போதைய நிலைமைக்குக் காரணமாகும். நோய்த்தொற்று உலகிலிருந்து ஒழிக்கப்படும் வரை நாட்டை மூடி வைக்க முடியாது. யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும். சுமார் 40 நாள்கள் மூடப்பட்டிருந்த பிரதேசங்களிலும் நாளாந்தம் தொற்றாளர்கள் பதிவாகின்றனர். இதிலிருந்து தெரியவருவது மூடிவைப்பதால் மட்டும் நோய்த்தொற்றை ஒழிக்க முடியாது என்பதாகும் என்றும் அவர் கூறினார்.

இலகுவான விடயம் நாட்டை மூடி வைப்பதாகும். எனினும், மக்கள் வாழ வேண்டும். தொழில்கள், விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைககளிலும் ஈடுபட்டு பொருளாதாரத்தைப் பாதுகாப்பது எனது பொறுப்பாகும். பி.சி.ஆர். பரிசோதனைக்காக அரசு நாளொன்றுக்கு 60 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் செலவிடுகின்றது. தனிமைப்படுத்தல் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளுக்கும் நாளாந்தம் பெருந்தொகை செலவிடப்படுகின்றது. மக்கள் இந்த நிலைமையைப் புரிந்துகொண்டு நோய்த்தொற்றுக்கு ஆளாவதிலிருந்து தவிர்ந்திருப்பது அவர்களது தனிப்பட்ட பொறுப்பும் கடமையுமாகும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும், கொவிட் விசேட செயலணி உறுப்பினர்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## மேலும் 2 கிராம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அங்குலான வடக்கு மற்றும் அங்குலான தெற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளே தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

## கொரோனா வைரஸால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேர்ந்த 84 வயதான வயோதிபப் பெண்ணே மரணமடைந்துள்ளார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று சாவடைந்த வயோதிபப் பெண் தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கம்பஹா மாவட்டத்தில்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரால் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

## தாய்ப்பால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அ.அக்சயன் என்ற ஒரு மாதமே ஆன ஆண் குழந்தையே உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சிறைக் கொத்தணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெரும் சவாலாக மாறி யுள்ளது.

இதுவரை வெலிக்கடை, போகம் பர மற்றும் மாத்தற சிறைகளில் இதுவரை 108 கைதிகள் உள்ளிட்ட 110 பேருக்குக் கொரோ னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சிறை நிர்வாகம், புனர்வாழ்வு மற்றும் திறன் மேம்பாட்டு ஆணையர் சந்தனா ஏகநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது :-

வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனாத் தொற்று உறுதியான கைதிகளின் மொத்த எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் பெண் கைதிகள் 89 பேரும், ஆண் கைதிகள் 11 பேரும் உள்ளடங்குகின்றனர். இதுதவிர சிறைப் பாதுகாப்பு விவரங்களுக்கு நியமிக்கப்பட்ட பொலிஸ் விசேட பணி அதிகாரி ஒருவருக்கும், சமையல்கார ஊழியர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, போகம்பர சிறைச்சாலையில் 7 கைதிகளுக்கும், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து மாத்தறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்த கைதி ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் இவ்வாறு 110 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது – என்றார்.

சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றுஉறுதியானவர்களது எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றமையானது சிறைச்சாலைக் கொத்தணிகளை உருவாக்குமாக இருந்தால் மற்றொரு பேரவலமாக மாறக்கூடும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாத் தொற்றால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொற்றால் இறக்கும் முஸ்லிம்களின் உடல்களை முதல் கட்டமாக மன்னார் பிரதேசத்தில் இடமொன்றை ஒதுக்கி அடக்கம் செய்வதற்கு ஆராயப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியானதன் பின்னரே இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி 7ஆம் பக்கத்தில்)

காலைக்கதிர்

## மேல் மாகாணப் பயணங்களைத் தவிர்க்குமாறு யாழ். மக்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்து!

பொதுமக்கள் தேவையற்ற மேல் மாகாணத்துக்கான பயணங்களை தவிர்த்துக்கொள்ளுங்கள் என யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட தற்போதைய நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தற்பொழுது யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலைமை இறுதியாக அல்வாய் பகுதியில் மூன்று பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையையடுத்து இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தில் 1,419 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் மூன்று கிராமங்கள் முடக்கல் நிலையில் காணப்படுகின்றன. அங்கு தற்பொழுது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

## கொழும்பு மெனிங் சந்தைக்குள் பதற்றம்

கொழும்பு மெனிங் சந்தையில் நேற்றுக் காலை பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

மேல் மாகாண ஊரடங்கு சட்டம் நேற்று அதிகாலை நீக்கப்படும் என்பதுடன் மெனிங் சந்தையும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு வந்தது.

அந்தவகையில் மொத்த வியாபாரிகள் பலரும் நேற்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு நீக்கப்பட்ட பின் வர்த்தக நடவடிக்கைக்காக மெனிங் சந்தைக்குள் பிரவேசிக்க சென்றபோது பொலிஸார் அவர்களை அனுமதிக்கவில்லை. இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

பின்னர் வர்த்தகர்கள் வீதியோரங்களில் வைத்து தங்களது மரக்கறிகள் மற்றும் விற்பனைப் பொருள்களை விற்றனர்.

# பரவுகின்றது உண்ணிக் காய்ச்சல் மக்களிடத்தில் அவதானம் தேவை!

### அலட்சியம் செய்தால் மரணம் என்கிறார் வைத்தியர் யமுனாநந்தா



நாட்டில் ஏற்பட்டு வரும் கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில், உண்ணி காய்ச்சல் தொடர்பில் அவதானம் தேவை என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

தற்பொழுது பரவிவரும் உண்ணிக் காய்ச்சல் நோய் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே சி.யமுனாநந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்பொழுது கொரோனா நோய்த்தொற்று பரவிவரும் காலத்தில் எமது பிரதேசத்தில் காய்ச்சல் நோயுடன் பலர் சிகிச்சைக்கு வருகிறார்கள்.

இந்நிலையில் காய்ச்சல் எவ்வாறு வருகிறது எனப் பார்க்கும் பொழுது பொதுவாக வைரஸ் காய்ச்சல் எமது பிரதேசத்தில் காணப்படலாம்.

அடுத்ததாக டெங்கு காய்ச்சல் பொதுவாக தற்பொழுது ஏற்பட்டு கொண்டுவருகின்றது. அடுத்ததாக தற்போது உண்ணி காய்ச்சல் என்ற ஒரு பக்றீரியா காய்ச்சலும் ஏற்படுகின்றது.

அடுத்ததாக எலிக் காய்ச்சல் காணப்படுகின்றது. காசநோய் குரிய காய்ச்சல் காணப்படுகின்றது.

எனவே இந்த காய்ச்சல் எவ்வாறு ஏற்படுகின்றது என்பதை அறிந்து எவ்வாறு சிகிச்சை அளிக்க வேண்டும் காய்ச்சல் ஏற்பட்டால் வைத்தியரை அணுக வேண்டிய அவசியம் மிக முக்கியமானது.

அந்த வகையில் உண்ணி காய்ச்சல் தற்போது அதிகளவில் ஏற்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய காலங்களில் இவற்றை அவதானித்தேன்.

பருவகாலங்கள் ஆரம்பிக்கும்போது உண்ணி காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் அதிகரிப்பார்கள், அதாவது வயல் வேலை செய்பவர்கள், தோட்ட வேலை செய்பவர்கள், உண்ணி காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அதிகளவில் வைத்தியசாலையில் சேர்க்கப்படுவார்கள்.

அடுத்ததாக அறுவடைக் காலங்களிலும் அதிக அளவில் உண்ணி காய்ச்சலால் வைத்தியசாலைக்கு சேர்க்கப்படுவார்கள். உண்ணிகாய்ச்சல் என்பது ஒரு வைரஸால் ஏற்படுகின்றது. இது பொதுவாக தெள்ளினால் பரப்பப்படுகின்றது.

பொதுவாக எலிகள், அணில், நாய், பூனை மற்றும் மிருகங்களின் காணப்படலாம். தெள்ளு உடலில் கடித்து அந்த கிருமி உடலுக்குள் செல்வதால் இந்த நோய் ஏற்படுகின்றது. இதன்போது காய்ச்சல் , உடல் நோ காணப்படும். இந்த நோய்க்கு உரிய சிகிச்சையை நோயை இனங்கண்டு உடனடியாகவே அதற்குரிய சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

மிருகங்களோடு பழகுபவர்களுக்கு தொற்று ஏற்படுவது சாதாரணமாகும். அத்தோடு உடலில் தெள்ளு கடித்தகாயம் ஏற்படுமாயின் அந்த காயத்தின் ஊடாகவே இந்த கிருமி உடலுக்குள் செல்கின்றது. இவற்றை அடையாளம் காணத் தவறும் இடத்தில் நோய் கடுமையாகி சில வேளைகளில் உயிரிழப்பும் ஏற்படலாம்.

ஆனால் நோய்க்கிருமிக்குரிய சிகிச்சை மிகவும் சுலபமானது. வைரஸ் எதிர்ப்பு மருந்தை கொடுப்பதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்தலாம். எனவே, உண்ணி காய்ச்சலுக்கு பயப்படத் தேவையில்லை. உண்ணிக் காய்ச்சல் வரக்கூடிய சூழல் பொதுவாக தோட்டவேலை செய்பவர்களுக்கு அதிகமாகக் காணப்படுகின்றது.

அடுத்ததாக உடல் சுத்தம் மிக முக்கியமானது. தினமும் அவர்கள் தோட்டத்துக்கு சென்று வந்து குளித்தல் அவசியமானது. அத்தோடு ஆடைகளையும் தினமும் துவைத்து பாவிப்பதால் உடலில் கிருமி தொற்றுதலைத் தவிர்க்கலாம். உண்ணி காய்ச்சல் ஏற்படுவதையும் தவிர்க்கலாம்.

உண்ணி காய்ச்சல் அடையாளம் காணப்படாவிடத்து மரணத்தையும் ஏற்படுத்தலாம். எனவே இது தொடர்பான விழிப்புணர்வு தற்போதைய காலகட்டத்தில் மிகவும் இன்றியமையாதது.

## குருநாகலில் கொரோனாவால் மற்றுமொரு நகரம் முடங்கியது!

குருநாகல் மாவட்டத்தில் நிக்கவரட்டிய நகரம் நேற்று தொடக்கம் எதிர்வரும் மூன்று நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட 6 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களுடன் நெருக்கமாக இருந்த பலரும் நிக்கவரட்டிய நகரிலுள்ள பல்வேறு வர்த்தக நிலையங்களுக்கும் சென்றுவந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்தே மேற்படி வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி முடக்கும் நிலைக்கு செல்லத் தீர்மானித்ததாக நிக்கவரட்டிய வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

# கொரோனா தொடர்பில் மக்கள் குழப்பத்தில்!

### எதிர்க்கட்சி எம்.பி. ஹேசா விதானகே



கொரோனா நோய்த்தொற்று தொடர்பில் சுகாதாரத்துறையின் உயர் அதிகாரிகள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் இதனால் மக்கள் மத்தியில் குழப்ப நிலைமை உருவாகியுள்ளது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று பரம்பல் தொடர்பிலான மெய்யான நிலைமையையும், அதனைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா சவால் தொடர்பான நீண்டகால தீர்வுத்திட்டங்கள் தொடர்பாக சுகாதார அமைசு கவனம் செலுத்தத் தவறியுள்ளதாகவும் குறுகியகால தீர்வுகளே வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா நோய்த் தொற்று பரம்பலைக் கட்டுப்படுத்தும் வல்லமை அரசாங்கத்திடமிருந்து கை நழுவி விட்டதா என அவர் நேற்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த சார்ஜன்ட் கைதானார்!

தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுக்காக பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவின் கீழுள்ள பகுதியிலிருந்து தனிநபர்களை கொண்டு செல்வதற்காக தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுக்காகவே இவர் பண்டாரகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இதன்போது மேலும் மூன்று சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், அவர்கள் பயணித்த வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## ஐக்கிய அரபு இராட்சியத்தில் நங்கூரமிட்டது நியூ டயமன்ட்!

இலங்கை கடற்பரப்பில் தீ பரவல் ஏற்பட்ட நியூ டைமண்ட் கப்பல் இந்தியப் பெருங்கடல் முழுவதுமான நீண்ட பயணத்துக்குப் பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ளது.

அந்தக் கப்பல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை புஜைராவில் நங்கூரமிட்டதாக சமூக வலைத் தளங்களில் வெளியான படங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

குவைத்தின் மீனா அல் அஹ்மதி துறைமுகத்திலிருந்து இந்தியாவிற்கு 2 லட்சத்து 70 ஆயிரம் மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய்யை கொண்டு சென்று கொண்டிருந்த இந்தக் கப்பல், இலங்கையின் கிழக்கு கடல் பகுதியில் 2020 செப்ரெம்பர் 03 ஆம் திகதி தீ விபத்துக் குள்ளானது.

தீ பரவியபோது இந்தக் கப்பல் 37 கடல் மைல் தொலைவில் பயணித்து என்றும் கப்பலின் இயந்திர அறையில் ஏற்பட்ட கோளாறே தீ பரவக் காரணம் என்றும் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு லட்சம் அன்டிஜென் பரிசோதனை கருவித் தொகுதிகள் வழங்கப்பட்டன!

### உலக சுகாதார ஸ்தாபனத்தால்

கொழும்பு, நவ.10

கொரோனா தொற்று நோயாளிகளை உடனடியாக அடையாளம் காண்பதற்கான, ஒரு லட்சம் அன்டிஜென் பரிசோதனைக் கருவித்தொகுதிகளை உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதனை ஔடத உற்பத்திகள் வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தப் பரிசோதனைக் கருவி தொகுதிகள், சுகாதார அமைச்சின் மருந்துகள் விநியோக பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குறித்த பரிசோதனைக் கருவித் தொகுதிகளை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு, உலக சுகாதார ஸ்தாபன பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நேற்று மாலை இடம்பெற்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

வெறும் 20 நிமிடங்களில் முடிவுகளை வழங்கும் ரேபிட் அன்டிஜென் கொவிட் -19 சோதனையின் பயன்பாடு விரைவில் நாட்டில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## 24 மணி நேரத்தில் 595 பேர் குணமடைவு

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து 24 மணி நேரத்தில் மேலும் 595 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 880 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 929 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 14 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 297 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர். மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 35 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## இந்தச் சடங்குகள் எதற்காக?

வாழ்வில் பல விடயங்கள் சம்பிரதாயபூர்வமாக – அடையாளப்படுத்தலுக்காக – குறியீட்டுக்காக – செய்யப்படுவதுண்டு.

விஞ்ஞான ரீதியில் – யதார்த்தபூர்வமாக – விளக்கமற்றவையாக, அவை இருக்கலாம். ஆனாலும் மன எண்ணவோட்ட ரீதியாக அவற்றுக்குள் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருக்கும். அவற்றுக்கு செயல் ரீதியாக விளக்கத்தை நாம் கொடுக்க முடியாது.

தேசியக் கொடி ஏற்றப்படும் போது, தேசிய கீதம் இசைக்கப்படும் போதும் நாம் எழுந்து நின்று மரியாதை கொடுக்கின்றோம். இது உலகம் முழுவதும் கைக் கொள்ளப்படும் ஒரு செயற்பாடு.

தேசியக் கொடி என்பது வெறும் துணிதான். நாட்டுக்குரிய இலச்சினையும், வர்ணங்களும், வடிவங்களும் பதித்து விடுவதால் வெறும் துணி நாடாகி விடாது. ஆனாலும் அத்தகைய வடிவத்தை அது பெற்றதும் நாம் அதனை நாடாகவே பாவனை பண்ணி, எண்ண ரீதியாக அதனைத் தேசியமாகக் கற்பித்து, அதற்கு மரியாதை செய்கிறோம். தேசிய கீதமாக ஒலிக்கும் இசைக்கோ, பாடலுக்கோ கூட நாம் இப்படித்தான் மரியாதை கொடுக்கிறோம். அதனைக் கிளர்ச்சி தரும் ஒரு சப்தமாக நாம் ஊகிப்பதில்லை. அதனையும் தாண்டி அதன் சுருதிகள், ஸ்வரங்கள், நாதங்கள் ஊடாக நாம் தேசத்தை மனதுக்குள் உருவகித்து அதை மரியாதைப்படுத்துகின்றோம். எமது மரியாதையை வெளிப்படுத்துவதற்காக ஒன்று பட்டு எழுந்த நிற்கின்றோம். அமைதி பேணி மரியாதை செய்கின்றோம்.

தேசியக் கொடியை வெறும் துணியாகவும், தேசிய கீதத்தை வெறும் சத்தமாக நோக்குபவன் மனதில் தேசத்தின் மீதான மதிப்போ, மரியாதையோ, அதைப் பிரதிபலிக்கின்ற நடத்தையோ வராது என்பது திண்ணம்.

கடவுள் வழிபாடும், நமது அனுட்டானங்களும், நம்பிக்கைச் செயற்பாடுகள் பலவும் இத்தகையனவே.

தமிழர் தம் மங்கள நிகழ்வுகளில் கும்பம் வைத்து வரவேற்பதில் தொடங்கி, உணவருந்திய பின்னர் வெற்றிலை மடித்துக் கொடுப்பது வரை இத்தகைய அர்த்த புஷ்டியான – குறியீட்டு ரீதியான – அடையாளப்படுத்தல்கள் பல இருக்கின்றன. அவற்றில் முரணிலைகளும் கூட உள்ளன.

வழக்கமாக மங்கள நிகழ்வை நிறைவேற்றுவதற்கு குத்து விளக்கை – தீபத்தை – ஏற்றுவதுதான் நமது காலாதிகால மரபு. ஆனால் பிறந்த நாளின் போது எல்லாச் சீரும் சிறப்பும் பெற்று நாம் வாழ்த்த வேண்டியவரை, பிறந்த நாள் கேக் மீது இருக்கும் தீபங்களை ஊதி அணைக்கும் படியும் கூறுகின்றோம்.

தீபம் ஏற்றுதலும் அணைத்தலும் கூட இப்படி முரணிலையாய் இருந்துகொண்டு வாழ்த்துவதற்குப் பிரயோகிக்கும் முறைகளாக நம் மத்தியில் உள்ளன.

நாய் விற்ற காசு குரைக்காது என்பார்கள். புளி விற்ற காசு புளிக்காது என்றும் கூறுவர். அது போல நாம் எழுதும் பேனா முன்னர் ஒரு விடயத்தை எழுதியதற்காகத் தன்பாட்டில் திரும்பவும் அதையே எழுதாது. அது எழுதுபவனின் சிந்தனையையும் விருப்பையும் பொறுத்துத்தான் எழுத்தைத் தரும்.

ஆனால், மரண தண்டனை விதிக்கும் நீதிபதி தீர்ப்பின் முடிவில் அந்தப் பேனாவின் முனையைக் குத்தி முறித்து விடுகின்றார். – அந்தப் பேனாவினால் இன்னொரு தீர்ப்பை எழுதக் கூடாது என்பதற்காக.

இவை எல்லாம் குறியீட்டு ரீதியான நிகழ்வுளேயன்றி, யதார்த்த பூர்வாக – செயல் ரீதியாக – விஞ்ஞான ரீதியாக – அர்த்தம் பொதிந்தவை அல்ல. சில சமயங்களில் அர்த்தம் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்.

கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக முகக்கவசங்கள் அணியுங்கள், கைகளை அடிக்கடி கழுவுங்கள், சமூக இடைவெளியைப் பேணுங்கள் என்றெல்லாம் கூறப்படுகின்றது. அவை விஞ்ஞான பூர்வமாகக் கனகச்சிதமான ஆலோசனை விடயங்கள். மருத்துவ ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. அர்த்தங்கள் நிறைந்தவை. அந்த வழிகாட்டல்கள் மூலம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தலாம் என்பது அறிவியல் ரீதியிலான உண்மை. அதில் சந்தேகம் இல்லை.

அதற்காக, ஆலயங்களில் தினசரி மணி அடிப்பதாலோ, யாகங்களை புரிவதாலோ, கங்கைகளில் தூய நீரைக் கலப்பதன் மூலமோ, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி விடலாம் என்று நாம் கேள்வி எழுப்பக் கூடாது.

அவை எல்லாம், அவரவர் நம்பிக்கை சார்ந்த குறியீட்டு விடயங்கள்தாம்.

எப்படி இரண்டு மீற்றர் துணி, தேசியக் கொடியாகி, முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்று நாம் நம்புகின்றோமோ, அது போன்றவைதான் இந்த சமயசார நடவடிக்கைகளும்.

ஆஸ்பத்திரியில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பவருக்காக, கோவில்களிலும் தேவாலயங்களிலும் விகாரைகளிலும், பள்ளிவாசல்களிலும் நாம் வழிபாடு நடத்துவது போன்றன நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்தவைதான் வைரஸ் தொற்றுக்கு எதிரான சில மத நடவடிக்கைகளும்.

சம்பந்தப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தவும், சமூக ஒன்றுபடலை ஊக்குவிக்கவும், சிந்தனைத் தெளிவைக் கொண்டு வரவும் இந்த அடையாளப்படுத்தல்கள், குறியீட்டு ரீதியான நிகழ்வுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் போன்றவை நிச்சயம் உதவும்.

விஞ்ஞான ரீதியில் சிந்திப்பவர்களாக தம்மைக் காட்டிக் கொள்பவர்கள், இத்தகைய சடங்குகளை ஏற்காவிட்டாலும் – குறைந்த பட்சம் பகிரங்கமாக எதிர்க்காமல் – பிறர் நம்பிக்கைக்குக் குந்தகம் ஏற்படுத்தாமல் இருக்கின்றோம் என்ற கருத்தி, அமைதி பேணலாம் அல்லவா?

# இராமேஸ்வரம் மீனவர்கள் நான்கு பேர் இலங்கைக் கடற்படையிடம் சிக்கினர்

## இன்று காலை அவர்கள் விடுவிக்கப்படக் கூடும்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.10

இந்தியாவில் இருந்து புறப்பட்ட தமிழக மீனவர்கள் நால்வர் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் இராமேஸ்வரத்தில் இருந்து நேற்றுக்காலை ட்றோலர் மீன்பிடிப் படகில் புறப்பட்ட இந்த நால்வரும் அதிக அலை காரணமாக திசை மாறி வந்துவிட்டனர் என இலங்கைக் கடற்படையினரிடம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 06/3716 இலக்கப் படகே இவ்வாறு வெற்றிலைக்கேணியில் நிற்பதோடு அதில் பயணித்த நான்கு மீனவர்களும் வெற்றிலைக்கேணிக் கரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தற்போதைய கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் இவர்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் சந்தர்ப்பம் கிடையாது எனத் தெரியவருகின்றது.

இந்தப் படகுடன் 4 இந்திய மீனவர்களும் இன்று காலை இந்தியாவிற்கே திருப்பி அனுப்பப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வடிகானில் வீழ்ந்து குடும்பஸ்தர் பலி!

## கொழும்பு - புத்தளம் பிரதான வீதியில்

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் உடப்பு சந்தியிலுள்ள வீதியோர வடிகானில் விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார்.

புளிச்சாக்குளம்,அக்கரவெளி பகுதியைச் சேர்ந்த என்.எம்.இப்றாஹீம் (வயது 65) எனும் ஆறு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என உடப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியோரத்தில் உள்ள வடிகானில் சடலம் ஒன்று கிடப்பதாக உடப்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன், சம்பவ இடத்துக்கு புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் சம்சுல் ராபி விஜயம் செய்து விசாரணையை நடத்தியதுடன், பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலம் புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இன்று பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாக உடப்பு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பீ.ஜி.சீ.ஆர். குணதிலக தெரிவித்துள்ளார்.

# 64 வீதமான குடும்பங்களின் வருமானம் கொரோனா தொற்றால் நேரடி பாதிப்பு!

கொரோனா நோய்த் தொற்று வெகுவாக பரவி வருகிறது. இதன் காரணமாக 64 வீதமான குடும்பங்களின் வருமானத்தில் நேரடி பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக உருகுணு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பீடம் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

கொரோனா பாதிப்பு காரணமாக 7 வீதமான குடும்பங்களின் வருமானம் முற்றுமுழுதாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நாட்டின் 45 வீதமான குடும்பங்கள் கடனை மீளச் செலுத்த முடியாத, அடகு வைத்த நகைகளை மீட்க முடியாத நிலையில் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான குடும்பங்கள் நிதி உதவிகளை எதிர்பார்த்திருப்பதாக ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

# முகக்கவசம் இன்றிக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார் வடக்கு ஆளுநர்!





வவுனியாவில் இடம்பெற்ற கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத் திட்ட கூட்டத்தில் முகக்கவசமின்றி வடமாகாண ஆளுநர் பீ.எச்.எம்.சாள்ஸ் கலந்து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண சுட்டிக்காட்டியமையையடுத்து முகக்கவசத்தை பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் பெற்று அணிந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வரவேற்பு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் பீ.எச்.எம். சாள்ஸ் முகக்கவசம் அணியாது அதில் கலந்து கொண்டுள்ளார்.

இதன்போது அந்த வரவேற்பில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண, முகக்கவசம் அணியவில்லை என்பதை வடமாகாண ஆளுநருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து அவர் உடனடியாக அவரின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தரை வரவழைத்து முகக்கவசம் எடுத்து வருமாறு பணித்து அதன் பின்னர் முகக்கவசத்தை அணிந்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடமாகாணத்தில் கொரோனா பாதுகாப்புக்காகப் பல்வேறு உத்தரவைப் பிறப்பித்துடன், வடக்கு மாகாண ஆளுநர் பீ.எச்.எம். சாள்ஸ் கொரோனா பாதுகாப்பு முகக்கவசத்தை அணியாது நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை அங்கிருந்தவர்களுக்கிடையே சலனத்தை ஏற்படுத்தியிருந்தது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2020

'எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்.'

- லியூசிலார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)

# தெற்கு கடலில் தீப்பிடித்தது படகு மீனவர்கள் கடற்படையால் மீட்பு!

தெற்கு கடல் பகுதியில் மீன்பிடிப் படகொன்றில் பல நாள்கள் ஏற்பட்ட தீயை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய கடற்படையினர் கடந்த சனிக்கிழமை குறித்த மீன்பிடிப் படகு மற்றும் மீனவர்களையும் பாதுகாப்பாக காலி துறைமுகத்துக்கு அழைத்து வந்துள்ளனர்.

அம்பலாங்கொடை மீன்பிடித் துறைமுகத்தை விட்டு வெளியேறிய 'ஜனத் ஐ' என்ற மீன்பிடிப் படகு கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தவேளை, கொக்கலை கடல் பகுதியில் வைத்து அதன் இயந்திர அறையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் இருந்த தெற்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட ஒரு கடலோர கண்காணிப்பு ரோந்து படகு மீன்பிடி படகில் ஏற்பட்ட தீ விபத்தை அவதானித்துள்ளது.

அதன்படி, கடலோர கண்காணிப்பு ரோந்து படகு மீன்பிடி படகில் பல நாள்கள் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமையுடன், தீயை அணைக்கும்



நடவடிக்கைகளை அதிகரிக்க காலி துறைமுகத்திலிருந்து ஒரு துரித தாக்குதல் படகொன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, துரித தாக்குதல் படகு மற்றும் கடலோர பாதுகாப்பு படகு ஆகியவற்றின் கடற்படை வீரர்களால் இந்தத் தீயை வெற்றிகரமாக அணைக்க முடிந்தது.



மேலும், இந்தச் சம்பவத்தில் மீன்பிடி படகில் இருந்த மீனவர்கள் காயமடையவில்லை. இந்நிலையில், மீனவர்களுடன், படகும் கடற்படை மூலம் காலி மீன்பிடித் துறைமுகத்துக் குப் பாதுகாப்பாகக் கொண்டு வரப்பட்டது.

மேலும், கொவிட் 19 பரவுவதைத் தடுக்க வழங்கப்பட்ட சுகாதார அறிவுறுத்தல்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி இந்த நடவடிக்கைகள் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# வடக்கு இளைஞர்களும் என்னைப் போன்று அரசியலுக்கு வரவேண்டும் என்கிறார் நாமல்!



என்னைப்போல் வட பகுதிகளில் இருந்தும் இளைஞர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டு அமைச்சுகளை பொறுப்பெடுத்து யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட தலைமை காரியாலயத்தை நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

கடந்த 30 வருட காலமாக நடந்த யுத்தத்தின் தாக்கத்தின் காரணமாக வடபகுதி அபிவிருத்தி அடையாத நிலை காணப்பட்டது எனினும் யுத்தம் நிறைவடைந்த பின்னர் தற்போது நாட்டில் சுதந்திரம் நிலவி வருகின்றது.

எனினும் தற்போதைய அரசாங்கம் வடபகுதியில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது அதிலும் குறிப்பாக விளையாட்டு துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து நாம் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உதைபந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டுகளுக்கு மைதானங்கள் இந்த அரசாங்கத்தால் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன. அதே போன்று சர்வதேச ரீதியில் விளையாடுவதற்காக வடக்கிலிருந்தும் இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பது எமது ஆர்வம்.

எனவே கடந்த 30 வருட காலமாக இருந்த நிலையை மறந்து நாம் அனைவரும் புதிய யுகம் நோக்கி பயணிப்பதன் மூலம் எதிர்காலத்தில் எமது நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.– எனவும் அவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் ஐம்பொன் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன!

யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானை, ஓடக்கரை நாகதம்பிரான் ஆலயத்துக்கு அண்மையாக உள்ள குளத்துக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஐம்பொன் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில் அந்த இடத்துக்குச் சென்ற அவர்கள், குளத்துக்குள்ளிலிருந்து சிலைகளை மீட்டெடுத்துள்ளனர்.

அதாவது, சுமார் 68 வருடங்களுக்கு முற்பட்ட முருகன், 3 மயில்கள், கலசம் ஆகிய ஐம்பொன் சிலைகளே இவ்வாறு மீட்கப்பட்டன.

அந்தக் காலப்பகுதியில் தங்கம் அதிகளவு சேர்க்கப்படுவதால் அவற்றின் தற்போதைய பெறுமதி ஒன்றரைக் கோடி ரூபாய் வரும் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

நீண்டகாலத்துக்கு முன்பு அவை புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. மேலும், மீட்கப்பட்ட சிலைகள் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. அந்தச் சிலைகளை இந்தியாவுக்கு கடத்தும் நோக்குடன் குளத்துக்குள் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# மட்டக்களப்பு முகத்துவார ஆற்றுவாயை வெட்டுவது தொடர்பான கலந்துரையாடல்



மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பெய்து வருகின்ற பருவகால மழை காரணமாக வெள்ளநீர் தேங்கியுள்ள நிலைமையில் விவசாய நிலங்கள் கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 212 ஏக்கர் தற்போது நீரில் மூழ்கியுள்ளமையால் மாவட்டத்தின் விவசாய மக்கள் முகத்துவார ஆற்றுவாயை வெட்டி நீரை வெளியேற்றுமாறு மாவட்ட அரச அதிபர் கே. கருணாகரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை கருத்திற்கொண்ட அரச அதிபர் அவசர கூட்டம் ஒன்றை நேற்று (திங்கட்கிழமை) கூட்டினார். இது தொடர்பாக சம்பந்தபட்ட திணைக்கள அதிகாரிகளுடன் ஆற்றுவாய் வெட்டுவது தொடர்பான சாதக பாதக நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்த ஆண்டு பருவகால மழை வீழ்ச்சி இன்று வரையும் போதுமானதாக காணப்படாமையால் சற்று தாமதமாக ஆற்றுவாய் வெட்டுவதன் ஊடாகவே நிலத்தடி நீரைப் பாதுகாத்துகொள்ளமுடியும் என அதிகாரிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாய மற்றும் மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில், விவசாயிகளின் பயிர்கள் நீரால் மூழ்கிக்காணப்பட்டு அழிவுறும் நிலைமையில் உள்ளன எனவும் இதில் தங்களுடைய வாழ்வாதாரம் தங்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர் உடனடியாக ஆற்றுவாயை வெட்டி நீரின் தாக்கத்தைக் குறைத்துத்தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அதே போன்று மீனவ சங்கங்களின் பிரதிநிதி கருத்து தெரிவிக்கையில் –

நீர்மட்டம் குறைவாகக் காணப்படுகின்ற நிலைமையில் ஆற்றுவாயை வெட்டிவிடுகின்றபோது நன்னீர் மீன்கள் கடலினுள் செல்வதால் தங்களுடைய தொழில் பாதிப்பு ஏற்படும் எனவும் இதை சற்று நீர்மட்டம் அதிகரிக்கும் போது வெட்டிவிடுவதன் மூலம் தங்களுடைய தொழில் பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்ளலாம் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இறுதித்தீர்மானமாக 6 பேர் கொண்ட ஒரு குழு அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டு அவர்களின் தொழிநுட்ப அறிக்கையை 3 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் சாதக பாதக நிலைமைகளை கருத்திற்கொண்டு தீர்மானங்களை எட்டமுடியுமென அரசாங்க அதிபரால் குறிப்பிடப்பட்டது.

# ஊரடங்கை மீறிய 3 ஆயிரம் பேர் கைது!

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் 91 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது 12 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இது வரை 2 ஆயிரத்து 923 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், 438 வாகனங்கும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பில் அதிகரிக்கும் தொற்று வாழைச்சேனையில் ஊரடங்கு நீடிப்பு!



வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோரளைப்பற்று மத்தியில் மீண்டும் 6 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா மைய காரியாலயத்தை மாவட்ட செயலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) திறந்துவைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் இதுவரை 48 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் தனிமைப்படுத்தும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மேலும் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டமையையடுத்து, சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக்கு அமைய இந்தப் பகுதியில் தனிமைப்படுத்தும் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தப் பகுதி மக்கள் பீதியடையாமல் எவ்வாறு இன்றுவரை இருந்தார்களோ அவ்வாறே தொடர்ந்தும் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளை இராணுவத்தினர் சுகாதாரப் பிரிவு, பொலிஸார், மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்துக்கான கொரோனா மையத்தை மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்திருக்கின்றோம்.

மாவட்டத்தில் கொரோனா தொற்று மற்றும் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் என அனைத்து தகவலும் உடனுக்குடன் இந்த மையத்துக்கு வந்தடையும்.

அந்த தகவல்களை உரிய பிரதேச சுகாதார பணிமனைகளுக்கும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் உடனுக்குடன் வழங்கப்படுவதுடன், இந்த மையம் 24 மணிநேரமும் தொடர்ந்து இயங்கும். இந்த மையத்துடன் தொடர்புகொள்ள 065 2226874 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கை – இந்திய ஒப்பந்தம்: ஒரு வரலாற்றின் திசை நோக்கு

அங்கம் 08
சிரேஷ்ட சட்டத்தரணி செ. ரவீந்திரன்
(தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் - T.R.R.O)
ஆஸ்திரேலியா



ராஜீவ்காந்தியின் படுகொலை

வரதராஜப்பெருமாள், 19 அம்ச கோரிக்கைகளை பிரேமதாஸவுக்கு வழங்கி, பதில் ஒன்றும் இல்லாத பட்சத்தில் 1990 மார்ச் 01 ஆம் திகதி ஒருதலைப்பட்சமான சுதந்திரத்தை பிரகடனப்படுத்திவிட்டு, இந்திய அரசின் அனுசரணையுடன் மொரிஸீயஸ் தீவுக்குச்சென்று பின்னர், இந்திய வடமாநிலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டார்.

இந்தியா அவரை ஒரு வெளிநாட்டின் பிரதிநிதியாக, ஒரு மூத்த அரசியல்வாதியாக அதற்குரிய வசதிகளோடும் கௌரவத்துடனும் பாதுகாப்போடு நடத்தியது.

இடையில் இந்தியாவிலும் இலங்கையிலும் பாரிய மாற்றங்கள் நடந்தன. வி.பி. சிங், 1990 செப்டெம்பர் 16 ஆம் திகதி தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்ய, அதற்கு பிரமாண்டமான வரவேற்பை வழங்க முதல்வர் கருணாநிதி ஏற்பாடு செய்தார். பாரிய அளவில் கருணாநிதியின் பாணியில் பல பதாதைள் அவரது வரவேற்பு பாதையில் வைத்தார். புலிகளும் தங்கள் கோஷங்கள் தாங்கிய பதாதைகளை இவற்றோடு இணைத்துக்கொண்டனர்.

அத்வானி அயோத்திக்கு நடைப்பயணம் மேற்கொண்டார்.

இவற்றின் எதிரொலியாக பா.ஜ. க. , சிங்கிற்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெற, அந்த அரசாங்கம் பெரும்பான்மை பலத்தை இழந்தது. வி. பி. சிங் இராஜிநாமா செய்தார்.

தனிப்பெரும்பான்மை அற்ற ஒரு அரசிற்கு ராஜீவை பிரதமராக்க இந்திய ஜனாதிபதி அழைத்தாலும் அதனை மறுத்ததையடுத்து 1990 நவம்பரில் சந்திரசேகர் பிரதமரானார்.

இலங்கையிலே பிரேமதாஸ, வரதராஜப்பெருமாள் பிரகடனப்படுத்திய ஒருதலைப்பட்ச சுதந்திரத்தை காலங்கடந்து பாவித்து வடக்கு – கிழக்கு மாகாண சபையை கலைத்து தேர்தலுக்கு வழிசமைத்தார்.

ஆனால், அமைச்சர் ஏ.ஸி. எஸ். ஹமீத் பிரதான பேச்சாளராக புலிகளோடு அவர்களின் ஆயுதங்களை களைவதற்கு பேச்சு நடத்தினார். ஆனால், அவரதும் ரஞ்சன் விஜேரத்தினவினதும் தொனிகளில் கடுமை இருந்தது. தாங்கள் ஒரு சமாதான வழி என்று புலிகளை நம்பி வந்து ஒரு குருட்டு சந்தில் நிற்கிறோம், அவர்கள்



இலங்கை இராணுவம்

ஒருவழிக்கு வராவிட்டால், அரைகுறையான யுத்தம் அல்ல, முழுமையான யுத்தமே நடக்கும் என்றும் எச்சரித்தனர்.

நாடு முழுவதும் எந்தவிதமான தடையற்ற கட்டுப்பாடற்ற சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தி எல்லோருக்கும் பாதுகாப்பான சூழ்நிலை ஏற்படுத்தி தேர்தல் நடத்த, புலிகள் ஆயுதங்களை விட்டுவிட்டு வரவேண்டும் என்று நிர்பந்தப்படுத்தப்பட்டனர்.

அதனால், புலிகளுக்கு பிரேமதாஸ மீதிருந்து நம்பிக்க அகன்றது. அவர் நேர்மையற்று நடக்கிறார் என்று புலிகள் குற்றம் சுமத்தினர். 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' அவர்களின் சுயநிர்ணய அடிப்படையில் அமைந்தது. தங்களால் சிங்களத்துடன் இணைந்து வாழ்வது எவ்விதத்திலும் சாத்தியமற்றது என்று காணப்படுகிறதோ அன்று அப்பொழுது அவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதுவரை ஆயுதங்களை களைதல் என்ற பேச்சுக்கே இடமில்லை என புலிகளும் பதிலறிக்கை தந்தனர்.

1990 ஜூன் 11 இல் மீண்டும் யுத்தம் ஆரம்பமானது.

கருணாநிதியின் ஆதரவை அல்லது, அவரது கண்டுகொள்ளாத தன்மையில் புலிகள் தமிழ்நாட்டில் பல நிலைகளில் சக்திவாய்ந்தவர்களாக பரவுகிறார்கள் என்ற பலமான குற்றச்சாட்டுக்கள் இந்திய மத்திய சி.பி.ஐ. யினாலும் இலங்கை அரசாலும் முன்வைக்கப்பட்டன.

ஈ.பி. ஈ . ஆர். எல். எவ், பத்மநாபாவும் மற்றும் அவரது சகாக்கள் பன்னிரண்டு பேரும் தமிழ்நாட்டில் சென்னை கோடம்பாக்கத்தில் கொல்லப்பட்டனர்.

பிரபாகரனை, ஜெயலலிதா தனது இல்லத்திற்கு அழைத்து தனது அரசியல் பேச்சுக்களுக்கு தகவல்கள் அறிந்திருந்தாலும் புலிகளின் நடவடிக்கைகளினால் அதிருப்தியடைந்திருந்தார்.

மத்திய அரசுக்கு அவரது அ.இ. அ. தி.மு.கவுக்கு கூட்டு இருந்தது.

இந்த நிலையில் 1991 மே 21 ஆம் திகதி அந்த துன்பியல் சம்பவமான ராஜீவின் கொலை தமிழ்நாட்டில் ஸ்ரீபெரும்புதூரில் நடந்தது.

தி.மு.க.வின் விடுதலைப்புலிகளுடனான உறவினா



நான்கு தலைவர்கள்

லும், அது பற்றி சி.பி.ஐ. மத்திய அரசுக்கு முன்வைத்த அறிக்கைகளினாலும், ஜெயலலிதாவின் உந்துதலினாலும் கருணாநிதியின் ஆட்சி சந்திரசேகரது அரசினால் கலைக்கப்பட்டது.

புலிகளுடன் நட்புறவு கொண்டிருந்த விஜயகுமாரணதுங்க கொழும்பில் கொல்லப்பட்டார். அதன் பழி ஜே.வி.பி. மீது போடப்பட்டது.

பிரேமதாஸ, ரஞ்சன் விஜேரத்தின, நீலன் திருச்செல்வம், ஈ.பி.ஆர். எல். எவ். மத்தியகுழு உறுப்பினர் கேதீஸ்வரன், காமினி திஸாநாயக்கா ஆகியோர் புலிகளால் கொழும்பில் தீர்த்துக்கட்டப்பட்டனர்.

சந்திரிக்கா விஜயகுமாரணதுங்கா ஜனாதிபதியானார். இந்தியாவில் ராஜீவின் படுகொலையை அடுத்து, எழுந்த அனுதாப அலையினால் காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வந்தது.

நரசிம்மராவ், மன்மோகன் சிங் ஆகியோர் அடுத்தடுத்து பிரதமரானார்கள். ஆனால், சோனியா காந்தியின் கைப்பிடியிலேயே இயங்கினார்கள்.

ராஜீவ் கொலையை விசாரிக்க வர்மா, ஜெயின் கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. அவை புலிகளின் பக்கம் குற்றத்தை சுட்டிக் காண்பித்தாலும், காங்கிரஸின் தரப்பில் தி.மு.க.வின் அசிரத்தைகள் பற்றியும் சொல்லப்பட்டது. காங்கிரஸ் சார்பில் பல கேள்விகளை எழுந்தன. ஆனாலும் புலிகள் தம் மீதான குற்றச்சாட்டுக்களை சுமந்து, இந்தியாவிற்கும் தங்களுக்கும் இடையிலும் தமிழர்களுக்கு ஒரு வெற்றிடத்தை வளர்த்தார்கள்.

இலங்கையில் சந்திரிக்கா வெள்ளைப்புறாவாக சமாதானப்பேச்சுக்கள் நடத்தி, 13 ஆவது ஷரத்துக்கும் மேலான ஒரு சுயாட்சித் தீர்வை முன்வைத்தார்.



சிதம்பரத்துடன் கட்டுரையாளர்

ஆயினும், நடந்த பல இழுபறிகளினால், இந்த யோசனையும் முன்னேற்றம் காணாமல் 'சமாதானத்துக்கான போர்' தொடங்கியது. அது நீடித்தபோது, நோர்வே நாட்டின் எரிக் சொல்கெய்ம் புலிகளினாலும் இலங்கை அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 2002 இலிருந்து பல சுற்றுப்பேச்சு வார்த்தைகளும் நடந்தன.



ராஜீவ்காந்தியின் இறுதித்தருணம்

போர் நிறுத்த உடன்படிக்கைகளும் வந்தன. வன்னி பெருநிலப்பரப்பில் புலிகள் பலம்பொருந்திய நிலையில் வளர்ந்தனர். அத்துடன் ஏனைய தரப்புகளில் எடுக்கப்படும் தீர்மானங்களை திசைதிருப்பக் கூடியவர்களாகவும் திகழ்ந்தனர். பாரிய சுயாட்சி (Federal) அரசு தரக்கூடிய நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டது.

தம்மை ஒரு சுயாதீனமான வல்லமையுள்ள விடுதலை அமைப்பாக புலிகள் தங்களை வளர்த்தெடுத்து இனப்பிரச்சினையில் அவர்கள் செய்த அளப்பரிய தியாகங்களால் உரிமைக்கோரிக்கையை சர்வதேசமயப்படுத்தி அவர்களுடாக அன்றி ஒரு சமாதானம் பெற முடியாது என்ற முனைப்பில் இருந்தனர்.

இதற்கும் பிரபாகரன் இணங்கி வரவில்லை என்பது பாலசிங்கத்திற்கு ஆதங்கம். ஜெனீவாவில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் அவர் அங்கிருந்து லண்டன் சென்றார். பேச்சுவார்த்தைகளிலிருந்து இலங்கை திரும்பிய கருணாவுக்கும் பிரபாகரனுக்கும் கருத்துவேற்றுமை தோன்றி, கருணா தனது சகாக்களுடன் வெளியேறினார். இந்த நிலைமைகளை தனக்கு சாதகமாக்கிக்கொண்ட அல்லது, உருவாக்கிக்கொண்ட இலங்கை அரசு, சர்வதேச நிலைகளையும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தையும் பாவித்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் கோணத்தில் புலிகள் ஒடுக்கப்பட வேண்டியவர்களே என்று அவர்களை அழித்தார்கள்.

அது தமிழர்களின் அழிவாகவே முடிந்தது.

புலிகளின் ஆதரவாளர்களும், தமிழருக்கு ஒரு நியாயமான தீர்வு தரப்படவேண்டும் என அந்த கோரிக்கைக்கு பாடுபடும் ஆர்வலர்களும் பல தளங்களில் ஐ. நா. முன்னிலையில் இயங்கினாலும், இலங்கை அரசுக்கு தலையிடி தரக்கூடிய வகையில் தமிழருக்கான ஒரு போராட்ட சக்தி இலங்கையில் இல்லை என்பது நிதர்சனம்.

இலங்கை அரசின் பலம் ஆயுதத்தாலும் அரசியலாலும்



என்.டி. ராமராவ் - வி.பி. சிங் - கருணாநிதி

தமிழர் விரோதப்போக்கினாலும் 2009 இற்குப்பின்னர் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம், சுந்தரலிங்கம், செல்வநாயகம், வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் என்ற வரிசையில் தமிழினத்துக்கு நடக்கும் அநீதியை எடுத்துக்கூறியவர் பலர். அவை செவிடன் காதில் ஊதிய சங்கானது. இன்னும், இன்றும் அப்படியான பேச்சில் சிங்கள – பௌத்த பேரினவாதத்தை எதிர்க்கலாம் எனச்சொல்லிக்கொண்டு பல தில்லுமுல்லுகளுடன் அங்கே செல்வோர் பலரின் பேச்சுகள் நாடாளு மன்றிலும் ஊடகங்களிலும் பதிவாவதைத் தவிர வேறென்ன ஆகப்போகிறது..? அவர்களால், வேறு எதனைத்தான் ஆக்கமுடியும்..?

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து, முழு இலங்கையும் தமக்கானது என்ற மகாவம்ச கனவை நடைமுறைப்படுத்திய திட்டங்கள் படிப்படியாக அரங்கேறி வருகின்றன. அவைகள் தமிழர் தாயகத்தை தற்போது காவு கொள்கிறது. (11 ஆம் பக்கம் பார்க்க…)

# அமெரிக்காவின் ஆட்சிமாற்றம் இலங்கைக்கு சாதக நிலைமை!

## இப்படிக் கூறுகின்றார் சஜித்



அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தால், ஒட்டு மொத்த உலகுக்கும் சாதகமான நிலைமை காணப்படு வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் தார்.

அநுராதபுரத்தில் செய்தியாளர்களிடம் கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு கூறினார். சஜித் பிரேமதாச மேலும் கூறியுள்ளதாவது:-

'கொரோனாவினால் இன்று பலரது வாழ்வாதாரம் முற் றாக பாதிக்கப்பட்டுள்ளது. பல தொழில்கள் முடங்கியுள்ளன. மீனவர்கள், ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள், சிறுக் கைத்தொழிலாளர்கள், தினமும் உழைப்பவர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று ஒட்டுமொத்த நாடே பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இன்னமும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இது தொடர்பாக எதிர்க்கட்சி என்ற வகையில், ஒட்டு மொத்த மக்களுக்காகவும் நாம் குரல் கொடுப்போம்.

அதே நேரம், இன்று அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்நாட்டிலிருந்து இலங்கைக்கு தேவையானவற்றை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

அமெரிக்காவின் முன்னாள் அரசாங்கத்தைவிட, தற் போது அமையவுள்ள அரசாங்கத்தால் உலகுக்கு சாதக மான நிலைமை ஏற்படும் என்றே நாம் நம்புகிறோம்.

இதனை எமது நாடும் பயன்படுத்திக் கொள்ள வேண் டும். அமெரிக்காவுடன் சிறப்பான கொள்கையுடன் நாம் பயணிக்கவேண்டும்.

இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தை மேலும் பலப்படுத்த வேண்டும். நாட்டின் இறையாண்மையை பாதிக்காத ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

அமெரிக்காவின் இந்த ஆட்சி மாற்றத்திலிருந்து எமது நாட்டுக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்து நன்மை களையும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்' என குறிப்பிட் டுள்ளார்.

# கிழக்கு மாகாணத்தில் இதுவரை 107 பேருக்குக் கொரோனா உறுதி!

## மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 107 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கோறளைப்பற்று மத்தி சுகா தார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் நேற்று (திங்கட்கிழமை) காலை ஆறு பேர் புதிய தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டமை யையடுத்து மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண் ணிக்கை 67 ஆக உயர்வடைந்துள்ளது.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய 218 பேருக்கு மேற்கொள் ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 06 பேர் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் 67 பேரும் திருகோணமலையில் 13 பேரும் கல் முனையில் 20 பேரும் அம்பாறையில் 7 பேரும் கொரோனா வைரஸ் தொற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாகாணத்தில் ஐந்து சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு இவர்களுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் அவதானமாக செயற்படுமாறும் வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களை மக்கள் அடையாளப்படுத்தி அறியத்தருமாறும் அவர் பொதுமக்களுக்குக் கோரிக்கை விடுத் துள்ளார்.

# கொரோனாவிலிருந்து நாடு விடுபட மலையகத்தில் சமய வழிபாடுகள்

கொழும்பு, நவ.10

நாட்டில் கொரோனா வைரஸ் தொற் றின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில், அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பல்வேறு நட வடிக்கைகளை அரசாங்கம் மேற் கொண்டு வருகின்றது.

ஆனாலும், வைத்திய சக்தி மற்றும் போதுமானதாக அமையாது என்பத னால் தெய்வீக சக்தியின் மீது நம் பிக்கை வைத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டு மக்களிடமும் சமயத் தலைவர்களிடமும் கொரோனா தொற்று நீங்க, பூஜை வழிபாடுகளில் ஈடுபடு மாறு கோரிக்கை விடுத்தார்.

அக்கோரிக்கைக்கு அமைய மலை யகத்தின் இந்து மற்றும் கிறிஸ்த்தவ இஸ்லாமிய ஆலயங்களில் பல்வேறு சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

அந்தவகையில், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன் தலை மையில் கொட்டகலை ஸ்ரீமுத்து விநா யகர் ஆலயத்தில் விசேட பூஜை வழி பாடுகள் நடைபெற்றன.

விநாயகர் வழிபாடு விசேட பிணி நீக்கும் 27 மூலிகைகளை கொண்ட விசேட யாக பூஜையாக இடம்பெற்ற துடன், அதில் 108 தடவை மிருதஞ்ச பெருமானுக்கு நாம அர்ச்சினை இடம் பெற்றன.

நாட்டில் கொரோனா தொற்று தீவிர மாக பரவி வருவதனால் பூஜை வழி பாடுகள் சுகாதார பொறிமுறைகளுக் கமைவாக குறிப்பிட்ட அளவு எண் ணிக்கை பக்தர்களே கலந்து கொண்டு பூஜை வழிபாடுகளில் ஈடுப்பட்டனர்.

பூஜைவழிபாடுகளை கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய பிரதம குரு. ஸ்கந்தராஜா சிவாச்சாரியார் நடத்தி வைத்தார்.

அதனை தொடர்ந்து கொரோனா ஒழிய வேண்டும் என விசேட பிரார்த் தனையும் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளுக்கு கொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜ மணி பிரசாத் உட்பட பிரதேசவாசிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களை அடக்கம் செய்வது தொடர்பாக விசாரணை!

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொரோனா தொற்று காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்வதற்கான சாத்தியம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளு மாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கைவிடுத்துள்ளதாகநீதிஅமைச் சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொள்ளுபிட்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் 19 தொற்றால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக் கம் செய்வது தொடர்பாக கடந்த சனிக் கிழமை கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பால் கொரோ னாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரி ழந்தவர்களின் உடலை அடக்கம் செய் வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள் ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனக்கு வரும் 100 தொலைபேசி அழைப்புக்களில் 99 அழைப்புக்கள் முஸ்லிம்களை தகனம் செய்வதை தடுத்து நிறுத்தி அடக்கம் செய்ய அனு மதிபெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தே வருகின்றன எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முஸ்லிம்களின் நியாயமான பிரச்சி னையை நியாயமான முறையில் முன்வைக்கும்போது தமக்கு இனவாதி கள் என சாயம் பூசுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகில் 189 நாடுகளில் அடக்கம் செய்வதற்காக அனுமதி வழங்கப்பட் டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

எனவே இது தொடர்பாக விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து அடக்கம் செய்வ தற்கான சாத்தியம் இருக்கின்றனதா என்பது தொடர்பில் கவனம் செலுத்து மாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கோரிக்கை விடுப்பதி னால் நாட்டின் தனிமைப்படுத்தல் சட் டத்துக்கு சவால் விடுக்கின்றோம் என்று அர்த்தமில்லை எனவும் நீதி அமைச் சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 காரணமாக மரணிப்ப வர்களின் சடலங்கள் சுகாதார அதி காரிகளின் ஆலோசனைக்கு அமைய தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் முஸ்லிம்களின் சடலங்கள் தகனம் செய்யப்படுவதற்கு பல தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டு வரும் நிலையில், அது தொடர்பில் ஆராய அமைச்சரவையால் 18 பேர் கொண்ட தொழில்நுட்ப குழு நியமிக் கப்பட்டது.

குறித்த குழுவுடனேயே கலந்து ரையாடப்பட்டதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

# கிருலப்பனை பொலிஸ் அதிகாரிக்கு தொற்று!

கிருலப்பனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரியொருவர் கொரோனா தொற்றுக் குள்ளாகியுள்ளார் என பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி கூறியுள்ளார்.

அவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி யவர்கள் தனிமைப்படுத்தபட்டுள்ளமையுடன், கிருலப்பனை பொலிஸ் நிலையமும் கிருமி நீக்கம் செய்யப்படவுள்ளது.

# வழமைக்குத் திரும்பின போக்குவரத்து சேவைகள்

கொரோனா வைரஸ் பரவலைக் கருத்திற் கொண்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தூர இடங்களுக்கான பயணிகள் பஸ் சேவை நேற்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகியுள் ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரி வித்துள்ளது.

எனினும் தூர இடங்களுக்கான பஸ்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் நிறுத் தப்பட மாட்டா என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரி வித்துள்ளார்.

அத்துடன் இலங்கை போக்குவரத்து சபை யின் அனைத்து குறுந்தூர பஸ் சேவைகளும் இன்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

மேலும் சுகாதாரப் பாதுகாப்பு முறைமை யைப் பின்பற்றி, இன்று முதல் அலுவலக ரயில் சேவைகள் இடம்பெறும் எனத் ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதே சங்களில் அந்த ரயில்கள் நிறுத்தப்படமாட்டா என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அந்த வகையில் வடக்கு மார்க்கத்தில், குரு நாகல் ரயில் நிலையம், முத்தெட்டுகல உப ரயில் நிலையம், பிரதான மார்க்கத்தில் அமைந்துள்ள தெமட்டகொடை உப ரயில் நிலையம், களனி ரயில் நிலையம், வன வாசல் உப தொடருந்து நிலையம், ராகமை தொடருந்து நிலையம் ஆகி யனவற்றில் நிறுத்தப்பட மாட்டா என அறிவிக் கப்பட்டுள்ளது.

புத்தளம் மாக்கத்தில் பயணிக்கும் ரயில்கள், பேரலந்த உப ரயில் நிலையம், ஜாஎல ரயில் நிலையம், நீர்கொழும்பு தொடருந்து நிலை யம்,கட்டுவ உப ரயில் நிலையம் என்பனவற்றில் நிறுத்தப்பட மாட்டாது.

அதேநேரம் மேல் மாகாணத்துக்கு உட்பட்ட அனைத்து அதிவேக நெடுஞ்சாலை நுழைவா யில்களும் இன்று முதல் மீண்டும் திறக்கப்பட வுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனா வைரஸ் அச்சத்தால் இலங்கையில் மூவர் தற்கொலை

## தாதியர்களை ஏற்றிச் சென்ற பஸ் சாரதியும் உள்ளடக்கம்

கொழும்பு, நவம்பர் 09

இலங்கையில் கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் காரணமாக அச்சமடைந்துமேலும்இருவர்தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்த நிலையில், இதே காரணத்துக்காகத் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 3ஆக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே கம்பஹாவில் உள்ள விசேட தேவையுடைய நபர் ஒருவர் தாய்க்குக் கொரோனா அச்சுறுத்தல் காரணமாகபரிசோதனைக்குஅழைத்துச் செல்லப்பட்டுள்ளதை அடுத்து அண்மையில் தற்கொலை செய்து கொண்டார்.

இதேவேளை, களுத்துறை டிப்போவில் பணியாற்றிவரும் சாரதி ஒருவர் கொரோனா அச்சத்தால் மன விரக்தியடைந்து நேற்று வீட்டின் முன் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நாகொடை வைத்தியசாலையில் பணியாற்றும் தாதியர் குழாமை அழைத்துச்செல்லும் பஸ் சேவையின் சாரதியாக அவர் கடமையாற்றி வந்தவராவார். அதேவேளை, கம்பஹா - ஏக்கல பிரதேசத்திலும் வயோதிபப் பெண் ஒருவர் கொரோனா அச்சத்தால் இன்று தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

# நவம்பர் 23ஆம் திகதியே பாடசாலைகள் ஆரம்பம்!

## கல்வி அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் நவம்பர் 23ஆம் திகதி மீளத்திறக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இன்று தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலைகள் இன்று மீள திறக்கப்படும் என கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும், கொரோனாப் பரவலால் மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே மேலும் இரு வாரங்களுக்கு விடுமுறையை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# அநுராதபுரத்தைச் சேர்ந்த யாசகருக்குக் கொரோனா

அநுராதபுரம் நகரைச் சேர்ந்த யாசகர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த பகுதியில் உள்ள மேலும் 81 யாசகர்களைத் தனிமைப்படுத்த விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அநுராதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த யாசகர்களைப் பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்து தனிமைப்படுத்த அநுராதபுரம் நகராட்சி மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் அவர் கூறினார்.

கொரோனாத் தொற்று உறுதியான 80 வயதுடைய குறித்த யாசகர் தற்போது அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நிவாரணம் பெற வரிசையில் நின்ற பெண் மயங்கி வீழ்ந்து சாவடைந்தார்

கொரோனா கால நிவாரணமாக அரசு வழங்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெற வரிசையில் காத்திருந்த பெண் ஒருவர் மயக்கமடைந்து கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கந்தானையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கொரோனா காரணமாக வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு அரசு வழங்கும் உதவித் தொகையைப் பெறுவதற்காக வரிசையில் காத்திருந்தபோது, காதிரானா வில் வசிக்கும் 62 வயதான குறித்த பெண் கிராம சேவகர் அலுவலக வளாகத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

அவரின் மாதிரியை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீர்கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

# மாத்தறை சிறையிலும் பெண் கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று

மாத்தறைசிறைச்சாலையில் உள்ள பெண் கைதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து குறித்த பெண் கைதி கம்புருகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் கைதி இம்மாதம் முதலாம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து மாத்தறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இதனை அடுத்து மாத்தறையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் மூலம் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

# தமிழகத்துக்கு நிதி நிறுவன முகாமையாளரை ஏற்றிச் சென்ற படகோட்டிக்கு விளக்கமறியல்!

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து தமிழ் நாட்டுக்கு சட்டவிரோதமான முறையில் தப்பிச் சென்ற நிதி நிறுவன முகாமையாளரையும் அவரது மனைவி, மகளையும் அவ்வாறு தப்பிச் செல்வதற்கு படகு ஒன்றில் ஏற்றிச் சென்றவர் எனக் கருதப்படும் படகோட்டி கைது செய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொண்டைமானாறு மீனவரான 32 வயதுயுடைய ஒருவரே வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப் பட்டார். இதேவேளை, இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற நிதி நிறுவன முகாமையாளர் குடும்பத்துடன் இந்தியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# செட்டிகுளத்தில் கடை ஒன்று தீயில் எரிந்து சாம்பலாகியது

## பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசம்



வவுனியா, செட்டிகுளம் பகுதியில் கடையொன்று தீப்பற்றியதில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இன்று அதிகாலை செட்டிகுளம் பகுதியில் உள்ள இரும்பகம் ஒன்றே இவ்வாறு எரிந்து சாம்பலாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இன்று அதிகாலை வீதியால் சென்றவர்கள் கடைக்கு மேலாக புகை வருவதை அவதானித்து அருகில் சென்று பார்த்தபோது கடைக்கு உள்ளே தீப்பற்றுவதை அவதானித்து அத்தீயை அணைக்க முயற்சித்துள்ளனர்.

இருப்பினும் தீயைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரமுடியாத நிலையில் செட்டிகுளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற செட்டி குளம் பொலிஸார், வவுனியா நகர சபை தீயணைப்புப் பிரிவுக்குத் தகவல் வழங்கினர்.

குறித்த இடத்துக்குச் சென்ற தீயணைப்புப் பிரிவினர் பொலிஸார் மற்றும் பிரதேச மக்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவந்தன.

இருப்பினும் குறித்த வியாபார நிலையத்துக்குள் இருந்த சுமார் 80 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

தீப்பற்றலுக்கான காரணம் கடைக்குப் பொருத்தப்பட்டிருந்த மின்சாரத்தின் ஒழுக்கு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீப்பற்றல் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (100)

# உழவு இயந்திரம் தடம்புரண்டு இளைஞர் ஒருவர் சாவடைந்தார்

உழவு இயந்திரமொன்று தடம் புரண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு, உன்னிச்சை - கரவெட்டியாறு வயற்பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உழவு இயந்திரமொன்று தடம் புரண்டதில் 18 வயதுடைய இளைஞரொருவர் உயிரிழந்துள்ள நிலையில் மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளார். அருணாச்சலம் அஜித்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், காயமடைந்த இளைஞர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சம்பவத்தில் பலியான இளைஞர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறாதவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மேல் மாகாணத்திலிருந்து மலையகத்துக்கு சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள்!





கொழும்பு, நவ.10

மேல்மாகாணம் உட்பட கொரோனா வைரஸ் வேகமாக பரவும் அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து மலையகப் பெருந்தோட்டப்பகுதிகளுக்கு இன்று சென்ற வாகனங்களும், அதில் பயணித்தவர்களும் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

மேல் மாகாணத்திலும் நாட்டில் ஏனைய சில பகுதிகளிலும் பிறப்பிக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்குத் தளர்த்தப்பட்டது. எனினும், வெளிமாவட்டங்களுக்கு பயணம் மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு மக்களிடம் கோரப்பட்டுள்ளது.

அதேபோல மேல் மாகாணம் உட்பட கொரோனா வைரஸ் பரவக்கூடிய பகுதிகளில் உள்ளவர்கள், தீபாவளி பண்டிகைக்காக மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு வருகைதர வேண்டாம் எனவும், அவ்வாறு வந்தால் குடும்பத் தோடு சுய தனிமைக்கு உட்படுத்தப்படு வீர்கள் எனவும் சுகாதார வைத்திய அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இந்தநிலையில், வெளியிடங்களில் இருந்து மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு வருபவர்களைத் தடுப்பதற்கும், கண்காணிப்பதற்கும் பொலிஸாரும்,இராணுவத்தினரும்இணைந்து கூட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதன்படி ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை தியகல, கலுகல பகுதியிலும், ஹட்டன் - கண்டி பிரதான வீதியில் கினிகத்தேனை பகத்தொழுவ பகுதியிலும் விசேட சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 24 மணிநேரமும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வீதிகள்ஊடாகவரும்அனைத்து வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்படும். இந்தநிலையில் அநாவசியமான முறையில் பெருந்தோட்டப்பகுதிகளுக்கு இன்று செல்ல முற்பட்ட வாகனங்களும், அதில் பயணித்தவர்களும் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

அத்துடன், அங்கு வருபவர்கள் தொடர்பான தகவல்களும் திரட்டப்படுகின்றன. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வருபவர்களை அவர்கள் தங்கி இருக்கும் இடத்திலேயே 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இன்னமும் சமூகத் தொற்று ஏற்படவில்லை சுகாதார அமைச்சு மீண்டும் வலியுறுத்து!

இலங்கையில் கொரோனா வைரஸ் சமூக தொற்றாக மாறவில்லை என சுகாதார அமைச்சு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை) மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதுவரை கண்டறியப்பட்ட அனைத்து நோயாளிகளும் ஏற்கனவே உள்ள ஒரு கொத்தணியுடன் இணைக்கப்பட் டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் எவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்து வந்தாலும் சமூக பரவல் நாட்டில் உள்ளது என்பதை எதிர்க் கட்சிகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றன.

இருப்பினும், இந்த நேரத்தில் கண்டறியப்பட்ட அனைத்து நோயாளிகளும் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர் என விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர கூறினார்.

ஆரம்பத்தில் மினுவாங்கொட கொத்தணியில் இருந்து ஏராளமான நோயாளிகள் கண்டறியப்பட்டனர். ஆனால் இப்போது எண்ணிக்கையில் குறைவு காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முடக்க கட்டுப்பாடுகள் இல்லாதபோது பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடைய பெரும்பாலானோர் கண்டறியப்பட்டமையால், அது ஏற்கனவே ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரவியிருப்பது கண்டறியப்பட்டது என்றும் இதன் விளைவாக நாடு முழுவதும் ஏராளமான நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.



பெரும்பாலான நோயாளிகள் ஒரு கொத்தணியுடன் இணைக்கப்பட்டுள்ளமையால் சமூக பரவல் இல்லை எனக் குறிப்பிட்டுள்ள சுதத் சமரவீர, இருப்பினும், சுகாதார வழி காட்டுதல்களைப் பின்பற்றத் தவறினால், சமூக தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து இருப்பதாகவும் அவர் எச்சரித்தார்.

# வன்னியின் காவலன் சிவசிதம்பரத்தின் 28 ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு!







வன்னியின் காவலன் என அழைக்கப்பட்ட ப.சிவசிதம்பரத்தின் 28 ஆவது நினைவுதினம் நேற்று (திங்கட்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது சிலையடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பண்டார வன்னியன் மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா, பண்டார வன்னியன் நற்பணி மன்றத்தினர் உட்பட பலரும் கலந்து கொண் டிருந்தமையுடன், சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# கொழும்பு மத்திய தபால் பரிமாற்றம் மீண்டும் மட்டுப்படுத்தப்பட்ட சேவை!

கொழும்பு, நவ.10

கொழும்பு மத்திய தபால் பரிமாறல் கடமைகள் சில மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை பின்வருமாறு:-

குறைந்த பட்ச பணியாளர்களை பயன்படுத்தி மத்திய தபால் பரிமாறல் கடமைகளை தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இந்த ஆளணியினரை எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படத்திய மூன்று சந்தர்ப்பங்களில் மூவர் தொற்றுக்குள்ளாகியமை பதிவானமையையடுத்து இந்த அலுவல்களை முழுமையாக இடைநிறுத்துவதற்கு கடந்த 05 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது.

நேற்று 9 ஆம் திகதி ஊரடங்கு சட்டத்தில் தளர்வு ஏற்படுத்தப்படுவதைத் தொடர்ந்து கிருமி நீக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட மத்திய தபால் பரிமாறல் வரையறுக்கப்பட்ட கடமைகள் சிலவற்றுக்காக திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக சர்வதேச விரைதூதர் தபால் சேவை, வர்த்தக தபால் சேவை, உள்ளூர் கடுகதி தபால் சேவை என்பன நேற்று 9 ஆம் திகதி தொடக்கம் செயற்பாட்டு அலுவல்களுக்காக திறக்கப்படும், பதிவுத் தபால் பிரிவு தெரிவு நடவடிக்கைகளுக்காக இன்று செவ்வாய்க் கிழமையன்று திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் கொழும்பு மாநகரிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் அரசாங்க அலுவலகங்களுக்கு பதிவு செய்யப்பட்ட தபால்களை விநியோகிக்கும் அலுவல்களை நாளை 11ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அல்லது தனியார் நிறுவனங்களுக்கான முத்திரை இடல் இயந்திரம் தொடர்பான அலுவல்களை இன்று தொடக்கம் முன்னெடுக்கக் கூடியதாக இருப்பதுடன் அதற்கான 0112 320 700 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரத்தை தெரிவுசெய்துக் கொள்ளுவதற்கான முன்னேற்பாட்டை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இருப்பினும் வரையறுக்கப்பட்ட ஊழியர்களைப் பயன்படுத்தி கடமைகளை நிறைவேற்றவேண்டியிருப்பதால் கடமைகள் ஓரளவிற்கு தாமதமடையக் கூடும் என்பதை மேலும் அறியத்தருகின்றோம்.

# இலங்கை மக்களுக்கு கொரோனா மருந்து!

இலங்கையில் நாளுக்கு நாள், கொரோனா தொற்று அதிகரித்து செல்லும் நிலையில், இலங்கை சனத்தொகையில், 20 வீதமானோருக்கு கொவிட் -19 தடுப்பு மருந்து வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக விசேட குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# மயூராபதி பத்திரகாளி வழிபாட்டில் பிரதமர் மஹிந்த கலந்துகொண்டார்





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆசி வேண்டி வெள்ளவத்தை மயூராபதி பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற ஆசீர்வாத பூஜையில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் கலந்து கொண்டார்.

வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திர காளியம்மன் ஆலயத்தின் தலைமை பூசகரான உதய ராகமவால் இந்த ஆசீர்வாத பூஜை நடத்தப்பட்டது. இதில் பிரதமரின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்.

இதன்போது கொரோனா தொற்று நிலைமையிலிருந்து விடுபட்டு பாதுகாப்பாக வாழ்வதற்கு பிரதமரின் குடும்பத்தினர்களுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் பிரார்த்திக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் அமைந்துள்ள 'கடவர' ஆலயத்திலும் பிரதமர் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

# யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படும்!



அமைச்சர் நாமல் உறுதி

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானம் வடக்கின் சிறந்த மைதானமாக விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தை நேற்று (திங்கட் கிழமை) காலை பார்வையிட்டமையோடு அந்த விளையாட்டு மைதானத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆராய்ந்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

எதிர்வரும் ஆண்டுகளுக்குள் துரையப்பா விளையாட்டு மைதானத்தை சர்வதேச தரத்தை ஒத்தவகையில் நாங்கள் புனரமைக்கவுள்ளோம்.

வடக்கில் சிறந்த ஓர் உதைபந்தாட்ட மைதானம் ஆக தற்போது யாழ் துரையப்பா மைதானம் திகழ்கின்றது.

அத்தோடு இலங்கை பூராகவும் உதைபந்தாட்டக் கழகங்களை நாங்கள் புதிதாக ஆரம்பிக்க உள்ளோம். அதேபோல யாழ்ப்பாணத்திலும் புதிதாக கழகம் உருவாக்கப்படவுள்ளது.

துரையப்பா விளையாட்டு மைதானத்தில் உள்ளக அரங்கில் உடற்பயிற்சி நிலையம் ஒன்றையும் விரைவில் ஆரம்பிப்பதற்கு நாங்கள் எண்ணியுள்ளோம்.

அதனையும் தயார் படுத்துவதன் மூலம் ஏனைய மாவட்டங்களைப் போல வடக்கு இளைஞர்களும் தமது உதைபந்தாட்ட திறமையை வெளிப் படுத்துவதற்கு இந்த அரசு மேற்படி முயற்சிகளை முன்னெடுக்க உள்ளது. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சிறைச்சாலை கைதிகள் 107 பேருக்குத் தொற்று!

நாட்டில் இதுவரை 107 கைதிகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் துசார உப்புல்தெனிய தெரிவித்துள்ளார்.

இவ்வாற கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 90 பேர் பெண் கைதிகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி பழைய போகம்பரை சிறைச்சாலை மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை ஆகிய இரண்டு சிறைச்சாலைகளிலே இவ்வாறு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலையகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துவதே எமது இலக்கு!

## அமைச்சர் ஜீவன் உத்தரவாதம்

மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது இலக்கு. அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சில விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் 'சௌபாக்கிய நோக்கு' எனும் எண்ணக்கருவுக்கமைய புறநெகும திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட நுவரெலியா பிரதேச சபை பல்நோக்கு கட்டத்தின் திறப்பு விழா நேற்று (திங்கட்கிழமை) இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ளது. எனவே, அனைவரும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி வாழவேண்டும் கட்டாயம் முகக்கவசம் அணியவும் சுகாதார நடைமுறைகளை எவராவது பின்பற்ற மறுத்தால் அவர்களுக்கு நிலைமையைத் தெளிவுபடுத்தவும். அப்போதுதான் கொரோனா சவாலை எதிர்கொள்ள முடியும்.

அதேவேளை, வெளியில் இருந்து தோட்டப்பகுதிகளுக்கு வருபவர்கள் தொடர்பில் அவதானமாகவே இருக்கவேண்டும். அவ்வாறு வருபவர்கள் தோட்டங்களில் உரிய தரப்புகளிடம் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

சிலர் தனிமைப்படுத்தல் நடைமுறையை சிறை தண்டனைபோல் நினைக்கின்றனர். அவ்வாறு அல்ல, உங்களின் பாதுகாப்புக்காகவும், ஏனையோரின் பாதுகாப்புக்காகவுமே தனிமைப்படுத்தல் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே, அதற்கு அஞ்சவேண்டியதில்லை. சுகாதார மற்றும் பாதுகாப்பு தரப்புகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கவும்.

மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவே நாம் உள்ளோம்;. அரசாங்கத்தின் எதிர்ப்பார்ப்பும் அதுவே. கொரோனாவால் சிற்சில பணிகள் ஸ்தம்பித்துள்ளன. விரைவில் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்படும். ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வீடுகளில் நீர், மின்சாரம் என உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. அவற்றை முழுமைப்படுத்திய பின்னர் புதிய திட்டம் ஆரம்பிக்கப்படும். இந்திய தரப்புக்கும் இது பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் நிச்சயம் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்போம். - என தெரிவித்துள்ளார்.

# ஆணைக்குழுவை விமர்சித்த சஜித் அணியின் ஐந்து எம்.பிக்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்



அரசியல் பழிவாங்கல்கள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் ஐக்கிய மக்கள் சக்தியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளது.

ஹரின் பெர்னாண்டோ, சுஜித் பெரேரா, மயந்த திஸாநாயக்க, நளின் பண்டார மற்றும் ஜே.சி.அலவத்துவல ஆகிய 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆணைக்குழு முன்னிலையில் நேற்று ஆஜரானார்கள்.

இந்த ஆணைக்குழு நாட்டின் சட்ட விதிகளை மீறி நியமிக்கப்பட்டது எனவும், அரசு நிதியைத் தவறாகப் பயன்படுத்துகின்றது எனவும் கூறி இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான ஆணைக் குழுவில் ஐக்கிய மக்கள் சக்தியின் மேற்படி 5 எம்.பிக்களும் சமீபத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதையடுத்து தமது அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சவாலுக்கு உட்படுத்துகின்றனர் என்று ஜனாதிபதி ஆணைக் குழு குற்றஞ்சாட்டியிருந்தது.

அவர்கள் எங்களுக்கு எதிராக மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வார்கள் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. நாங்கள் நீதித் துறையை மதிக்கின்றோம். ஆனால், எங்கள் 5 எம்.பிக்களும் செய்த முறைப் பாடு தவறில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரா நேற்றுச் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆணைக்குழுவால் குற்றஞ்சாட்டப்பட்ட சஜித் அணியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கருத்துரிமையை நசுக்குகின்றார்கள் என்பதை வெளிப்படுத்தி கறுப்புப்பட்டியால் வாயை மூடியிருந்தனர்.

நல்லாட்சிக் காலத்தில் 2015 - 2019 ஆண்டுகளுக்கிடையில் அரசியல் ரீதியில் பாதிக்கப்பட்டவர்களின் சம்பவங்களை விசாரிக்க 2019ஆம் ஆண்டு நவம்பரில் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. குறித்த ஆணைக்குழு தனது நடவடிக்கைகளை முடித்து, இந்த வாரம் அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளது.

# சிறைக் கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு எடுக்கப்பட்டது தீர்மானம்!

கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பான நீதி அமைச்சரின் கோரிக்கைக்கு அமைய சட்டமா அதிபர் பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதனடிப்படையில் சட்டமா அதிபர் தப்புல தலிவேராவால் திருத்தப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் சில வெளியிடப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளில் பிணை வழங்க முடியுமான கைதிகளுக்கு பிணை வழங்குமாறும் ஏனைய சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனை சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளர் அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்..

# தாம் தொற்றாளர்கள் என்பதை அறியாது சமூகத்தில் இருப்போரை அறியவேண்டும்!

## முன்னாள் சபாநாயகர் கரு ஆலோசனை



கொரோனா வைரஸ் தொற்றுக்கு தாம் உள்ளாகியிருக்கின்றமையை அறியாமலேயே சமூகத்தில் இருப்பவர்களை விரைவாக இனங்காண வேண்டிய தேவையுள்ளது என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாகத் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர் -

தமக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கின்றமையை அறியாமலேயே துரதிஷ்டவசமாக சிலர் உயிரிழந்திருக்கிறார்கள்.

இவ்வாறாக வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றமையை விரைவாக இனங்கண்டு, வைத்தியசாலையில் சேர்க்கப்பட வேண்டிய பலர் சமூகத்தில் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

தாம் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றமையை அறியாத ஒருவர் அதை ஏனையவர்களுக்குப் பரப்புவதிலிருந்து எவ்வாறு விலகியிருக்க முடியும்?

அதேபோன்று மரக்கறிகள் உள்ளிட்ட உணவுப்பொருள்களை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் அனர்த்த முகாமைத்துவ அடிப்படையிலான முறையான செயற்திட்டமொன்றை அரசாங்கம் பின்பற்றுவது அவசியமாகும். - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தடுப்பு செயலணியின் ஒருங்கிணைப்பு மையம் திறப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொரோனாத் தடுப்பு செயலணியின் ஒருங்கிணைப்பு மையம் மாவட்ட செயலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) உத்தியோக பூர்வமாக மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரனால் திறந்துவைக்கப்பட்டது.

231 ஆம் இராணுவ படைப்பிரிவின் அதிகாரி கேணல் எஸ்.பீ.ஜி.கமகே, மேலதிக அரசாங்க அதிபர். சுதர்சினி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கலாரஞ்சினி கணேசலிங்கம், பிராந்திய சுகாதார பணிப்பாளர் என்.மயூரன், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட வைத்திய சௌக்கிய பராமரிப்பு விரிவுரையாளர் சுந்தரேசன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிலையத்தில் மாவட்ட செயலக உத்தியோகத்தர் ஒருவர், சுகாதார திணைக்கள பிரிவினர், அதேபோல் இலங்கை பொலிஸ், இராணுவ பிரிவினர் என நான்கு குழுக்களும் 24 மணித்தியாலமும் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

மாவட்டத்தின் எல்லைகளில் 6 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு அதனூடாக வெளி மாவட்டங்களில் இருந்து வருகின்ற நபர்கள் தொடர்பான முழு விவரங்களும் சேகரிக்கப்பட்டு இந்த நிலையத்தினூடாக கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் ஒருங்கிணைப்பு மையமாக இது செயற்படும்.

கொரோனா தொற்றாளர்களினதும், தனிமைப்படுத்தப்படுபவர்களினதும் விவரங்கள் உடனுக்குடன் சேகரிக்கப்படும் தகவல்மையமாகவும் செயற்படும். மருத்துவ ஆலோசனைகள் மற்றும் உளவியல் ஆலோசனைகள் வழங்குகின்ற தகவல் மையமாகவும், தனிமைப் படுத் தப்படுபவர்களுக்கு உணவு, மருத்துவம் போன்ற வசதிகளையும் வழங்குகின்ற மையமாகவும் இது செயற்படும்.



அவசியமான சந்தர்ப்பங்களில் மக்களின் வினைத்திறனான தேவையை வழங்க மக்கள் இந்தத் தொலைபேசி இலக்கத்துடன் (065 2226874) தொடர்பு கொள்ள முடியும். இதைத்தவிர மாவட்டத்தில் கொரோனாத் தொற்று தொடர்பான விவரங்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள கீழ்குறிப்பிடப்படும் இலக்கங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளமுடியும்.

# மலையக மக்களுக்கான எமது சேவை தொடரும்!

## மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவிப்பு

கட்சிபேதங்களுக்கு அப்பால் மலையக மக்களுக்கான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சேவைகள் தொடரும் என்று காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சௌபாக்கிய நோக்கு' எனும் எண்ணக்கருவுக்கமைய புறநெகும திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நுவரெலியா பிரதேச சபை பல்நோக்கு கட்டடத்தின் திறப்பு விழா நேற்று திங்கட்கிழமை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மருதபாண்டி ராமேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நுவரெலியாவிலும் ஏனைய சில இடங்களிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆளுகையின் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன.

எனினும், கட்சி பேதம் பார்த்து எமது கட்சிசேவை வழங்குவதில்லை. அனைத்து மக்களுக்கும் காங்கிரஸின் சேவைகள் தொடரும்.



கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒற்றுமையாக மக்களுக்கு சேவை வழங்குமாறு காங்கிரஸின் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் மறைந்த எமது தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆலோசனை வழங்கியுள்ளார். தற்போதைய எமது தலைவர் ஜீவன் தொண்டமானிடமும் அதே எண்ணம் தான் காணப்படுகின்றது.

அதேவேளை, 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும். கட்சி வேறுபாடின்றி மக்களுக்கான காங்கிரஸின் சேவைகள் எதிர்காலத்திலும் தொடரும்.

அத்துடன், மற்றுமொரு விடயத்தையும் குறிப்பிடவேண்டும். தீபாவளி பண்டிகை எமக்கு முக்கியம்தான், அதனைவிடவும் சமூக பாதுகாப்பு முக்கியம். எனவே, சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

## இலங்கை - இந்திய...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்த நில அபகரிப்பும் தொல்பொருள், வனபிரதேச திணைக் களங்களின் தலையீடும் அவற்றின் வெளிப்பாடே.

இந்த நிலையில், இலங்கை – இந்திய ஒப்பந்தம் தமிழருக்கு இதுவரை கொடுக்கப்படாத தமிழர் பிரதேசத்தை உள்ளடக்கிய சுயாட்சியும் திரும்ப எழுந்திருக்கிறது.

பழைய சரித்திரத்தை தூசுதட்டி முன்னெடுக்கிறது இந்தியப் பிரதமர் மோடியின் இந்துத்துவா அரசு. அவர்களது இந்துத்துவா தத்துவம் இந்திய நாட்டுக்குள்ளேயே அடங்குவது தான்.

ஆனாலும் மோடியின் பா. ஜ. க. அரசு தமிழர் மீது கரிசனை காண்பித்து ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத் துகிறது. அது அவர்கள் இந்துக்கள் சார்பானவர்கள் என்பதற்காக அல்ல. இனத்தின் காரணமோ, இந்தியாவின் தென்பகுதி தமிழர்களுடன் இணைந்தவர்கள் என்பதினாலேயே அல்ல. இந்தியப் பிராந்திய அதிகாரமும் இந்தியப்பெருங் கடலின் முக்கியத்துவமும் அதில் சீனாவின் ஈடுபாடும்தான்.

மோடியின் பா.ஜ.க., வி.பி. சிங்கின் அரசில் அங்கம் வகித்து, ஈழ இனப் பிரச்சினை காரணமாக இந்தியா இலங்கைக்கு இந்தியப்படையை அனுப்பியது தவறு என்பதை ஏற்று அதனை மீள அழைப்பதற்கு ஆதரவளித்தது.

இப்பொழுது தமிழரின் விடுதலைக்காக மகாபாரதத்தில் வலம் வந்த எத்தனையோ பேர் (பாண்டவர் பக்கமோ, கௌரவர்கள் பக்கமோ ) இல்லை. இவர்கள் பேசினார்கள், வலம் வந்தார்கள்.

அவற்றுக்காகவே இதனை அறிந்து கொள்வதற்காக வரலாற்று ரீதியாக முக்கியமானவற்றை இங்கே பதிவு செய்தேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர், முன்னாள் காங்கிரஸ் மத்திய அமைச்சர் சிதம்பரத்தை மெல்பனில் சந்தித்த போது, எங்கள் நிலைபற்றியும் ஒப்பந்தம் பற்றியும் கலந்துரையாடிய வேளையில், 'காங்கிரஸ்தான் தமிழரின் மீதான அக்கறையில் ஒப்பந்தத்தை கொண்டுவந்தது, ஆனால், அதன் சரித்திரம் இப்படியாகிவிட்டது. மீண்டும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் நாங்கள் மீண்டும் பதவிக்கு வரவேண்டும். அதற்கு நாடளாவிய தேசிய அரசாங்கம் என்ற ரீதியில் எமக்கு தமிழ்நாட்டின் ஆதரவும் இருக்கும். ஆனால், அரசியலில் பெரும்பான்மை பெற்று ஆட்சியைப்பிடிக்கும் சதுரங்கமே எங்கும் விளையாடப்படுகிறது. அதனால், பா.ஜ.க. தனது இந்துத்துவா கொள்கையால் வடபகுதி வாக்குகளால் கூடுதல் ஆசனங்களைப்பெற்று பதவிக்கு வந்தது. இனியும் வரும். தென்பகுதிகள் பற்றி அக்கட்சி கவலைப்படாது.' என்றார்.

ஆனால், மோடி அரசாங்கம் அதைக் கையிலே எடுப்பதற்கு காரணங்கள் உண்டு. தெரிந்தளவில் பழையபடி பிராந்திய நலன்தான். ஆனால், கதாபாத்திரங்கள்தான் வேறு. அன்று அமெரிக்கா, இந்திய கடல் எல்லையில் இருக்கும் நாடுகளில் காலூன்றக் கூடாது என்பது. இன்று அது சீனா.

பிராந்திய அதிகாரத்தின் ஆணிவேர் வியாபாரம். மனித உரிமை அல்ல.

சீனா அப்பகுதியை பாவித்து தங்களை மிஞ்சக்கூடாது, அதற்கு இலங்கை பாவிக்கப்படலாம் என்ற பயம்.

தங்களது பாதுகாப்புக்கு இலங்கை ஊடாக சீனாவிடமிருந்து அச்சுறுத்தல் வரலாமென்றால், இந்தியா இலங்கையில் உள்ளிடுவதை தனக்காகவே செய்யும். தற்மயம் அது அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியாவுடன் சேர்ந்து நான்முக நாடுகளின் (QUAD) கூட்டுறவுடன் சீனாவை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

சீன தூதுக்குழு வந்து மில்லியன்களில் உதவிகளை அறிவித்தவுடன், அமெரிக்காவின் மைக் பொம்பியோ இலங் கைக்கும் சீனா உதவி செய்து வரும் அந்தப்பிராந்திய நாடுகளுக்கும் அதிரடியாகப் போகிறார்.

அமெரிக்கா பல காலமாகக் கேட்ட மில்லினியம் சவால் கார்ப்ரேட் கொம்பக்ட் (Millennium Challenge Corporate Compact) என்ற ஒப்பந்தம், நாடாளுமன்ற அங்கத்தினர்களின் குளறுபடிகளினால், நடைபெறவில்லை.

ஒருவேளை 20 ஆம் திருத்த ஷரத்தின் அதிகாரங்கள் அவசர அவசரமாக நடந்ததற்கு நாடாளுமன்றத்தைக் கணக்கில் எடுக்காமல், ஒரு பலம்வாய்ந்த ஆட்சியின் எதேச்சதிகாரம் மூலம் அதில் கையெழுத்திட்டு நிலைமையை தற்சமயத்திற்கு நீர்த்துப் போகச்செய்வதற்கான வழிமுறை என்பது சிலரது அபிப்பிராயம்.

ஜே.ஆர். அதனை தனது அதிகாரங்களினால் 1987 இல் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்தார். அதனையும் நோர்வே பேச்சுவார்த்தைகளின் பிரதிபலிப்பையும் பாவித்து மஹிந்த ராஜபக்ஷ 2007 இல் போர் நிறுத்த உடன்பாட்டை முறியடித்தார்.

ராஜபக்ஷ அணியிலிருந்து மூன்றுபேரும் இந்திய வெளிவிவகார அமைச்சிலிருந்து மூன்றுபேரும் கொண்ட மும்மூவர் குழு (Troika) 2007 – 2009 வரை நடந்த போராட்டங்களின் நகர்வுகளை முன்னெடுத்தனர். அந்தக்குழுவில் கோட்டாபயவும் அங்கத்தினர்.

புலிகளுடன், தமிழர் நலன்கருதி இந்தியா கடைப்பிடித்த அரசின் மென்போக்கு ராஜீவின் கொலையாக மாறியதே இந்த Troika ஒழுங்கிற்கான காரணம்.

1977 இல் ஜே.ஆர். 'நான் தமிழர் பற்றியோ அவர்களது உயிர்களைப் பற்றியோ இனிப்பார்ப்பதற்கில்லை.' என்று எதேச்சதிகாரம் பேசினார். அதனை உன்மத்தமாக ராஜபக்ஷக்கள் நடத்திக்காண்பித்தனர்.

மஹிந்த, புலிகள் அடக்கப்பட்டதும், தான் 13 ஆம் ஷரத்துக்கு மேல் 1010 தருவேன் என்று இந்தியாவுக்கும் சர்வதேசத்திற்கும் உறுதியளித்தார். ஆனால், யுத்தம் முடிந்தபின்னர் தன்மீது திரும்பிய போர்க்குற்றங்களை திசைதிருப்பும் வகையில், 'அவ்வாறெல்லாம் சொன்னேனா..?' என்று கேட்கிறார். தங்களுக்கு எதிரான போர்க்குற்றங்களுக்காக தமிழரின் அரசியல் தீர்வை பகடைக் காயாக்குகிறார்.

( தொடரும் )

## மேல்மாகாண பொலிஸ் நிலையங்களில் 256 பொலிஸாருக்கு கொரோனா தொற்று!

மேல் மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கொரோனா தொற்றுக்குள்ளான பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கையானது 256 ஆக உயர்வடைந்துள்ளது.

ஆறு பொலிஸார் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள நிலையில், 250 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுவரை 317 பொலிஸார் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையுடன், 1,447 அதிகாரிகள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படவும் அறிவுறுத்தல் பிறப்பிக்கப்பட்டது.

இவர்களில் 23 பேர் தமது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்துள்ளமையுடன், 1,424 பொலிஸ் அதிகாரிகள் மாத்திரம் தற்போது தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

## முடக்கப்பட்ட பொலிஸ் பகுதிகளுக்கு உள் நுழைய, வெளிச்செல்லத் தடை!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உத்தரவு

கொழும்பு, நவ.10

நாடளாவிய ரீதியில் நேற்று முதல் முற்றாக முடக்கப்பட்டுள்ள, 25 பொலிஸ் பிரிவுகள் உட்பட 32 பிரதேசங்களுக்கு உள் நுழைவதும், அங்கிருந்து வெளிச் செல்வதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

தொழில் உள்ளிட்ட எந்தக் காரணத்துக்காகவும் முடக்கப்பட்ட பகுதிக்குள் உள் நுழையவோ, அங்கிருந்து வெளியேறவோ அனுமதிக்கப்பட மாட்டாது என சுட்டிக்காட்டிய அவர், அதனை மீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி, தனிமைப் படுத்தல் ஊரடங்கு நிலை நீக்கப்பட்ட பின் னர், நேற்று அதிகாலை 5 மணி முதல் அமுல் செய்யப்படும் விசேட முடக்க நிலையின் போது நடந்துகொள்ள வேண்டியவை என்ன என தெளிவு படுத்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண –

கொழும்பு மாவட்டத்தின் 12 பொலிஸ் பிரிவுகள், அதாவது மட்டக்குளி, முகத்துவாரம், புளூமெண்டல், கொட்டாஞ்சேனை, கிராண்ட்பாஸ், கரையோரப் பொலிஸ், ஆட்டுப்பட்டித் தெரு, மளிகாவத்தை, தெமட்டகொட, வெல்லம்பிட்டி, பொரளை மற்றும் வாழைத்தோட்டம் ஆகிய பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட அல்லது முடக்கப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனை தவிர கம்பஹா மாவட்டத்தின் வத்தளை, பேலியகொடை, கடவத்த, ராகம, நீர்கொழும்பு, பமுனுகம, ஜாஎல மற்றும் சப்புகஸ்கந்த ஆகிய 8 பொலிஸ் பிரிவுகளும், களுத்துறை மாவட்டத்தின் ஹொரனை மற்றும் இங்கிரிய ஆகிய இரு பொலிஸ் பிரிவுகளும், குலியாபிட்டிய பொலிஸ் பிரிவும் முடக்கப்பட்டுள்ளன.

கேகாலை மாவட்டத்தின் மாவனெல்ல மற்றும் ருவன்வெல்ல ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் முடக்க நிலை இருக்கும்.

இந்த 25 பொலிஸ் பிரிவுகளுக்கு மேலதிகமாக, பாணந்துறை – வேகொட மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவையும், குருநாகல் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதி, கொழும்பின் மெத்சந்த செவண, மிஹிஜய செவண, முகத்துவாரம் ரன்மின செவண, மத்தேகொட சிரிசந்த உயன தெமட்டகொட, மாளிகாவத்தை என்.எச்.எஸ். குடியிருப்பு தொகுதிகளும் முற்றாக முடக்கப்பட்டுள்ளன.

முடக்கப்பட்ட பொலிஸ் பிரிவுகள், ஏனைய பகுதிகளை சேர்ந்தவர்கள் அங்கிருந்து வெளியேறவோ வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் இந்த பொலிஸ் பிரிவுகளுக்குள் பிரவேசிக்கவோ சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

இந்தப் பொலிஸ் பிரிவுகளில் இருப்பவர்கள் தொழில் நிமித்தம் கூட அங்கிருந்து வெளியேற முடியாது. முடக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமது நிறுவன ஊழியர்களை சேவைக்கு அழைக்கின்றமையை நிறுவங்கள் தவிர்க்க வேண்டும். ஆபத்து மிக்க இடங்களாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளே முடக்கப்பட்டுள்ளன. எனவே ஆபத்தான இடங்களில் இருந்து ஊழியர்களை சேவைக்கு அழைப்பது மிக அபாயகரமானது.

எவ்வாறாயினும் தனிமைப்படுத்தப்பட்ட அல்லது முடக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உணவு விநியோக நிலையங்கள், பல்பொருள் வர்த்தக நிலையங்கள் மருந்தகங்கள், வீடுகளுக்கே சென்று பொருள்களை விநியோகிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அப்பகுதிகளுக்கு வெளியில் இருந்து விநியோக நடவடிக்கைகளை முன்னெடுக்க இதுவரை அனுமதியில்லை. அது தொடர்பில் ஆராயப்படும்.

அரச ஊழியர்கள், பொலிஸார், ஊடகவியலாளர்கள், அத்தியாவசிய சேவைகளை சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட, அவர்களும் அதே பகுதிகளில் தங்கியிருக்க வேண்டியது அவசியமாகும்.

எவ்வாறாயினும், ஏதேனும் சுகாதார தேவை மற்றும் அத்தியாவசிய தேவை அல்லது கொரோனா தொற்று அல்லாத வேறு நோய்களுக்காக மருந்தை பெற வேண்டிய அவசியம் காணப்படின் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் செல்வதற்கான அனுமதியளிக்கப்படும். கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் இருதய நோயாளர்கள் போன்றோருக்கு இந்த அனுமதி கிடைக்கும். இவையல்லாத வேறு ஏதேனும் காரணங்களுக்காக வெளியில் செல்லும் தேவையுடையவர்கள், தமது பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் நிலையம், சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

இதனைவிட் ஊரடங்கு நிலைமைகள் நீக்கப்பட்டுள்ள நிலையில், தனிமைப்படுத்தப்பட்ட அல்லது முடக்கப்பட்ட பகுதிகளில் வாகனங்களை நிறுத்திச்செல்ல முடியாது. பிரதான வீதிகள் முடக்கப்பட்ட பகுதிகளை அண்மித்து காணப்படும் பட்சத்தில் அந்த பகுதிகளை ஊடறுத்து பயணிக்க முடியும். ஆனால் நிறுத்த முடியாது. ரயில்களும் அவ்வாறே. மேல் மாகாணத்துக்குள் நுழையும் அதிவேகப் பாதைகள் திறக்கப்பட்டாலும், அதன் நுழை வாயில்களில் பொலிஸார் விசேட கண்காணிப்பு பணிகளில் அமர்த்தப்படுவர் எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளராக வைரமுத்து மகேந்திரநாதன்!



கொழும்பு, நவ.10

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வகுப்பு 1இல் சிரேஷ்ட பிரதி ஆணையாளராக இதுவரை கடமையாற்றி வந்த வைரமுத்து மகேந்திரநாதன், கிழக்கு மாகாணத்தின் இறைவரித் திணைக்களத்தின் மாகாண ஆணையாளராக கடந்த 2 ஆம் திகதி முதல் கிழக்கு மாகாண ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 27 வருடங்களாக இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி உத்தியோகத்தர், வரி மதிப்பீட்டாளர், உதவி ஆணையாளர், பிரதி ஆணையாளர், சிரேஷ்ட பிரதி ஆணையாளர் என பல பதவிகளையும் வகித்துவந்த இவர் இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் வரி மதிப்பீடு, வரி அறவிடுதல் போன்ற மேலதிக பயிற்சிநெறிகளை நிறைவு செய்திருந்தார்.

மட்டக்களப்பு செட்டிபாளயத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் செட்டிபாளைய மகா வித்தியாலயத்திலும், கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையிலும் கல்வி பயின்றார்.

இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியும் ஆவார்.

வை.மகேந்திரநாதன் தனது கடமைகளை கிழக்கு மாகாண சபையின் இறைவரித் திணைக்களத்தில் உத்தியோகபூர்வமாக கடந்த வியாழக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டிப்பருடன் மோதியது ஓட்டோ: சிறுவர் உட்பட மூவர் படுகாயம்



கிளிநொச்சி, நவ.10

கிளிநொச்சியில் ஏ – 9 வீதி வலயக்கல்வி பணிமனை அருகில் திடீரென டிப்பர் வாகனம் பிரேக் அடித்ததால் பின்னால் வந்து கொண்டிருந்த ஓட்டோ, டிப்பரின் பின்பகுதியில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியது.

பூநகரியிலிருந்து கிளிநொச்சியிலுள்ள தமது வீட்டுக்கு ஓட்டோவில் சென்று கொண்டிருந்த குடும்பமே இந்த விபத்தில் சிக்கியுள்ளது.

இதில் ஓட்டோவில் பயணித்த சிறுவர் உட்பட மூவர் காயமுற்ற நிலையில் கிளி நொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

# கோட்டா – ஜின்பிங் பேச்சு: மறுக்கிறது சீனத் தூதரகம்




சீன ஜனாதிபதி சின் ஜின்பிங்குடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணைய மூலமான பேச்சில் ஈடுபட்டார் என்று வெளியாகிய செய்திகளை சீன அரசு அடியோடு நிராகரித்துள்ளது.

இருவருக்கிடையிலான பேச்சு குறித்து கொழும் பிலிருந்து வெளிவரும் வாராந்த பத்திரிகையொன்று நேற்றுமுன்தினம் செய்தியை வெளியிட்டிருந்தது.

எனினும், அப்படியொரு விசேடமான பேச்சு இடம்பெறவில்லை என்று கொழும்பிலுள்ள சீனத்தூதரகம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் நேற்று தெரிவித்துள்ளது.

கடந்த 04ஆம் திகதி ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளுக்கு இடையிலான இணைய வாயிலான பேச்சு இடம்பெறறதை விடுத்து இரு நாட்டு அரச தலைவர்களுக்கும் இடையே எந்தவித பேச்சும் இடம்பெறவில்லைஎன்றும்தூதரகம்விளக்கமளித்துள்ளது.

# காட்டு யானையின் தாக்குதலில் மட்டு. கரடியனாறில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு, நவ.10

மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டியுள்ள அலியாஓடை எனும் வயற் பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனக் கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் சந்திவெளி கிராமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான காத்தமுத்து ஏரம்பமூர்த்தி (வயது 44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் வழமைபோன்று வயல் காவலில் ஈடுபட்டிருந்தபோது காட்டுக்குள் இருந்து பிரவேசித்த யானை இவரைத் தாக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் செங்கலடி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது. இச் சம்பவம்பற்றி கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(உ)

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விபரம்
பிறந்த திகதி – 1983.06.08
மதம் – இந்து A ஆசாரி
நட்சத்திரம் – அச்சுவினி
பாவம் – 29 1/2
கல்வி – பட்டதாரி
தொழில் – அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு – படித்த உத்தியோகப் பெண்.

மணமகள் விபரம்
பிறந்த திகதி – 1991.06.19
மதம் – இந்து A ஆசாரி
நட்சத்திரம் – உத்தரம் – 1
பாவம் – 56 1/4
செவ் – 1 இல் 32 புள்ளி
கல்வி – UK பட்டதாரி
தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – ஆங்கில அறிவுள்ள பட்டதாரி மணமகன் தேவை.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இளையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# கொரோனா ஊரடங்கை மீறிய 2 ஆயிரத்து 923 பேர் சிக்கினர்

## 438 வாகனங்களும் பறிமுதல்

கொழும்பு, நவ.10

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரப் பகுதியில் 91பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன்இதன்போது12வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 2 ஆயிரத்து 923 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், 438 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
•பிரான்ஸ் •ஜெர்மனி
•டென்மார்க்
•நெதர்லாந்து
•இத்தாலி
•சுவிஸ்
1150/= Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம்
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
0768226240

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் விசா
இன்று இறுதி நாள்
2022ல் நீங்களும் அமெரிக்காவில்...
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
55'000
இந்த வருடம் A/L
18
யாழ்ப்பாணம் 0768226243
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670
புதுக்குடியிருப்பு 0764550673
பருத்தித்துறை 0768226230
வல்வெட்டித்துறை 0776697960
V2 Travels 0768226244

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**விளம்பர அனுசரணை:-** காலைக்கதிர் Kalaikkathir